காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

இட்லரின் படத்தைத் திறந்து வைக்கவேண்டும் என்று ஈராறுகரத்தான் கொண்டுவந்த தீர்மானத்தை பேரூர் பெருமன்றத்தில், அறிவண்ணல் எதிர்த்தார்; வாக்கெடுப்பு நடைபெற்று, தீர்மானம் தோற்கடிக்கப் பட்டது.

முறைதான், என்கிறீர்கள்? முறைதான என்கிறேன்; உலக அழிவுக்காகத் துடித்துக் கிடந்த ஒருவனுடைய படத்தைத் திறந்து வைத்திட, எந்தப் பேதைதான் ஒப்புக்கொள்வான்; எதிர்த்துத் தோற்கடித்தவன், பெயரால் மட்டுமல்ல, உண்மையிலேயே அறிவண்ணல்; பாராட்டுவீர்கள்; பாராட்டுகிறேன். ஆனால் அப்படி ஒரு நிகழ்ச்சி எங்கும் நடைபெறவில்லை.

○

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்ருகக் கூட்டி, தாமரைக் கண்ணன் கொடுத்தான்; ஏடா! மூடா! என்னை இப்படியா இழிவு படுத்துவது! பழச்சாரு என்னைப் பருகச் சொல்கிருய். என்னை யாரென்று எண்ணிக் கொண்டாய்! நான் குடம் குடமாகக் கள்ளிப்பால் சாப்பிடுபவன்! கேவலம், பழச்சாறு சாப்பிடுவதா! என்று பேசி, ஏசி, பழச்சாறு நிரம்பிய வட்டிலைத் தட்டிவிட்டான பேரறிவாளன்.

முத்துகளை வீசி எறிந்துவிட்டு, நத்தை ஓடுகளை மாலையாக்கிக் கழுத்தில் அணிந்துகொண்டான் "நாலும் தெரிந்தவன்."

கொண்டுவா எருமையை! அதன் மீது ஏறிக்கொண்டு; ஊரைப் பாழாக்கிவரும் புள்ளிமானகளைத் துரத்திவிட்டு வருவேன், வேட்டையாடி! என்று முழக்கமிட்டான் 'பள்ளி' வெறுத்தான்.

முல்லையின் மணம் பட்டாலே என் நாசியிலே குருதி கொட்டும்; எனக்கு மகிழ்ச்சி தரும் மணம் தருவது, சீயொழுகும் புண்! என்று செப்பினன் ஒபபிலப்பன்.

கைவளை காதில் மாட்டி, காதணி காலில் பூட்டி, கூந்தலைப் புரளவிட்டு கொடிதனை இடையில் சுற்றி, நாவினில் மையும் பூசி நடுப்பகல் விளக்கெடுத்து, ஓடிடும் வாய்க்கால் தன்னில், ஒயிலம்மை நடந்து சென்ருள்.

தாயினைத் தடியால் தாக்கி, தடியனின் தாளில் வீழ்ந்து, பேழையின் பொருளைக் கொட்டி, பெற்றுமே அருள்வீர் அன்பு என்று தொழுதிட முனைந்தான் தூயமணியெனும் பெயரும் கொண்டான்.

இப்படி எல்லாம் நடக்குமென்று கற்பனை செய்வதுகூட முடியாதே! எங்கே இவை நடந்தன? என்று கேட்கிறீர்கள். எங்கும் நடைபெறவில்லை. ஆனல் இப்படி எல்லாம் கூட நடைபெறக்கூடும் என்ற அளவுக்கு ஒருவிதமான பீதி ஏற்பட்டது எனக்கு! காரணமற்று அல்ல; காரணம் கூறவா? இதோ ஓர் செய்தி, படித்துப் பார்த்திடுங்கள்; உங்களுக்கும் ஏற்படும், எனக்கு ஏற்பட்டது போன்ற பீதி.

○

பெரியகுளம் நகர மன்றத்தில் வள்ளுவர் படம் வைக்கவேண்டும் என்று கழகத் தோழர் திர்மானம் கொண்டுவந்தார். மற்ருெர் கழகத் தோழர் வழிமொழிந்தார். காங்கிரஸ் உறுப்பினர் அந்தத் திர்மானத்தை எதிர்த்தார். திர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டதில், தோல்வி அடைந்தது.

இதோ ஒரு செய்தி!

பெரியகுளம், தமிழகத்தில் உள்ள பெருநகரம். வள்ளுவர், தமிழகத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்து, வையகமே பாராட்டும் அறநூலை அளித்த பொய்யாமொழிப் புலவர். அவருடைய திருஉருவப் படத்தை மாட்ட, தமிழகப் பெருநகராம் பெரியகுளத்தில், நகர மன்ற காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு விருப்பம் இல்லை; கூடாது! என்று முடிவு செய்துவிட்டனர். தமிழர்கள்! தமிழர்களுக்கு தமிழ்மறைதந்த திருவள்ளுவர் படத்துக்கு ;தமிழக பெருநகரிலுள்ள மன்றத்தில் இடம்தர மறுத்துவிட்டார்கள் என்பதுசெய்தி. படித்த எனக்கு குழப்பமும், பீதியும் ஏற்படாமலிருக்க முடியுமா!!

○

வள்ளுவரின் அருமை பெருமையினை உணர்வார்களானல்; மாஸ்கோவாயினும் மணிலாவாயினும், பாரிசாயினும், டோகியாவாயினும், வாஷிங்டனுகிலும், ஆட்டவாவாகிலும், இலண்டனுகிலும், இலட்சுமணபுரியாகிலும், எவரும், வள்ளுவர் படத்தை எமது மன்றத்தில் தொங்கவிடக்கூடாது என்று கூறமாட்டார்கள்; அந்தப் படம் வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தைக் கட்சி பலம் காட்டித் தோற்கடிக்க மாட்டார்கள். பெரியகுளம் நகரமன்றத்துக் காங்கிரஸ் உறுப்பினர்கள் அந்தப் பெருமையைத் தேடிப் பெற்றுக்கொண்டனராம்!!

○

வள்ளுவரின் படத்தைத் தபால் தலையில் பொறித்து, இந்திய துரைத்தனம், தன் மதிப்பை உயர்த்திக் கொண்டது, தக்கார்க்குத் தலை வணங்குதல தலையாய பண்பு என பதை மெய்ப்பித்துக் காட்டிற்று. வள்ளுவருக்கு மதிப்பளிக்க மறுத்து விட்டனர், பெரியகுளத்து நகர் மன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள்.

○

வள்ளுவரின் திருஉருவப்படத்தை திறந்துவைத்து தமிழகச் சட்டமன்றம் பெருமை பெற்றுக்கொண்டது. அதற்கான விழா நடத்தித் தமிழரின் நன்மதிப்பைப் பெற்றது. தமிழக சட்டமன்றத்தில் வள்ளுவருக்கு இடம் கிடைத்தது. நல்லோரின் உள்ளத்திலெல்லாம் இடம் கிடைக்கப்பெற்றுள்ள வள்ளுவப் பெருந்தகைக்கு, பெரிய குளம் நகர் மன்றத்திலே இடம் கிடைக்கவில்லை தரமறுத்துவிட்டனராம், காங்கிரஸ் உறுப்பினர்கள்.

○

வள்ளுவருடைய அருமை பெருமையினை உணர்ந்த, பல நாட்டு அறிவாளர்கள், வள்ளுவர் எமது நாட்டில் பிறக்கவில்லையே என்றுகூறி ஏக்கம் கொள்கிருர்கள்; அந்த அளவுக்கு உலக அறிவாளர்களின் மனதினை ஈர்த்துக்கொண்டிருக்கிருர் திருவள்ளுவர்; உலகமே கொண்டாடினுலும், நாங்கள் வள்ளுவருக்கு இடம்தரமாட்டோம் என்று கூறிவிட்டனர், பெரியகுளம் நகர்மன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள்.

○

எமது மொழியிலே மொழிபெயர்த்திருக்கிருேம் என்று பல மொழியினர் பெருமை பேசுகிருர்கள், மகிழ்ச்சி தெரிவிக்கிருர்கள், வள்ளு

(16-ம் பக்கம் பார்க்க)

○

'காஞ்சி' குலக்கொழுந்துகள்

மலர் 1 22—11—64 இதழ் 18

நவம்பர் திங்கள் பதினுன்காம்நாள் 'குழந்தைகள்' தினம் என்பதாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இனிய இயல்புகளுடன் முற்போக்கான குறிக்கோளையும் கொண்டிருந்த பண்டித ஜவகர்லால், தமது பிறந்த நாளை, இம்முறையிலேயே கொண்டாட வேண்டும் என விருப்பம் தெரிவித்திருந்ததன்படியே, இந்நாள் நடாத்தப்பட்டு வருகிறது.

இந்நாளைக் கொண்டாடும் பொறுப்பினைப் பெரும் அளவு ஆட்சியினர் மேற்கொண்டுள்ளனர் என்ற போதிலும், இது இன்னமும் காங்கிரஸ் கட்சியினர், தமக்காகவே நடத்திக்கொள்ளும் நாளாகவே காட்சி அளித்து வருகிறது.

குழந்தைகள் நாள், நாட்டு மக்கள் இது 'நமது நாள்' என்று கருதத்தக்க விதமாக நடத்தப்பட வேண்டும்; பண்டித நேருவின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக 'தோற்றத்தை' மட்டும் அமைத்துக் காட்டுவது போதாது; முறையுமாகாது.

விழாத்தோற்றம், குதூகலம் தருவதாகவே அமைந்திருக்கிறது; மகிழ்கிறோம்; மறுக்கவில்லை.

அணி அணியாகச் சிறுவர் சிறுமியர், மலர்ந்த முகத்துடன், வண்ண ஆடைகள் அணிந்துகொண்டு, செல்வதும், கூடி நிற்பதும், எவரும் வியந்திடத்தக்க காட்சி, ஐயமில்லை.

இந்த உயிரோவியங்களின் சிரிப்பும் கலகலப்பும், எத்தகைய இன்னலையும் மறந்திடச் செய்திடும் மாமருந்து, சுவைமிகு விருந்து; ஆம் என்று கூருதார் இல்லை.

இந்நாடு வாழ்கிறது, இனியும் வாழப்போகிறது, என்றென்றும் வாழப்போகிறது என்பதனை எடுத்துக் காட்டும் எழிலோவியம், குழந்தைகளின் அணிவகுப்பு.

சிருரும் சிறுமியரும் ஆடிப்பாடி மகிழ்ந்திடும்போது எழும் ஓசையினும் இனியதோர் இசையினை எவரும் எழுப்பிடல் இயலாது. குழலும், யாழும் என்செய்யும் எனறன்றே கேட்டார், வள்ளுவர்.

துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தைவிட இனியதோர் பருவம், எவருடைய வாழ்க்கையிலும் இருப்பதில்லை.

கள்ளம் கபடமற்ற உள்ளம், புன்னகை, எளிதாக உணர்ச்சிகளைப் பெற்றிடும் விந்தை, வியக்கத்தக்க முறையில் உணர்ச்சிகள் மாறிடும் தன்மை,-குழந்தைப் பருவத்திலே காணப்படும் இந்த இயல்பு, சமூகத்திற்கு மகிழ்ச்சியூட்டிடும் பூங்காற்று!!

குலக்கொடிகள்! பெற்றெடுத்த செல்வங்கள்! பெருநிதிகள்! இன்பப் பெருக்குகள்! மலரப்போகும் மொட்டுகள்! எதிர்கால ஒளிச்சிதறல்கள்! பேசிடும் மின்மினிகள்! நடமாடும் நாதங்கள்! படமாக எழுத வொண்ணு எழில் உருவங்கள்! பார்த்தும் பேசியும், தொட்டும் பிட்டும், கிளறியும் குளறியும், தத்தியும் தொத்தியும், இன்பத்தைத் தந்தபடி உள்ள குழந்தைகள், பேசும் பொற்சித்திரங்கள்! குழந்தைகளைச் செல்வம் என்கிறோம், அவை நமக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே செல்வங்களாகின்றன.

அதோ கன்னத்தில் குழி விழுந்திடும் விதமாகச் சிரித்துக் கையொலி எழுப்புகிறதே ஒரு சிட்டு! வளர்ந்து வளர்ந்து, வனப்புமிகுந்து, சமூகத்துக்கு செல்வமாகி, மருத்துவராகவோ, மாண்புமிகு ஆசிரியராகவோ, தொழில்நிபுணனுகவோ, இசைவாணனுகவோ ஏற்றம் பெற்று, நாட்டுக்கும் ஏற்றம் அளித்திடும்— முயன்று, திட்டமிட்டு அக்குழந்தையின் வாழ்க்கையை நாம் அமைத்துத்தந்தால் — அதற்கேற்ற அறிவாற்றல் அமையப்பெற்றவர்களாக நாம் இருந்தால்.

அதோ, 'விடமாட்டேன்! விடவேமாட்டேன்' என்று கூறி உள்ளத்தைப் பறித்திட முனைந்திடும் மற்றொரு சிருனுடன் தன் வலிவினைக் காட்டி நிமிர்ந்து நிற்கிருனே சிறுவன், அவன் இயல்பு அறிந்து அதற்கு ஏற்றவிதமான பக்குவம் தெரிந்து, வளர்த்திடுவோமானுல், எல்லை காத்திடும் ஆற்றல்மிகு மாவீரனுவான்!

இதோ ஓர் சிறுமி! என்ன தளுக்கு! என்னென்ன விதமான கண் அசைவு! எத்துணை வேகமாக மலர்கிறது, மறைகிறது, மீண்டும் மலர்கிறது அந்தப் புன்னகை!! கலைக்கருவூலத்தையல்லவா இந்தச் சிறுமி வடிவில், நாம் காண்கிறோம்.

அதோ, அவன் அழைக்கிருன்; பலர் வருகிருர்கள்; அவன் கூறுகிருன், பலர் கேட்டு இசைவு தருகிருர்கள்! ஏன்? பலரைத் தன் வயப்படுத்திக் கொள்ளும் இயல்பு, அச்சிறுவனிடம் அரும்பாக இருக்கிறது; நல்லவிதமான வளர்ச்சி இருந்திடுமானுல், அவன் பிற்காலத்தில், சமூகத்திலே, 'தலைமை' ஏற்கும் திறமை பெற்றவனுகி விடுவான்!

எத்தனை எத்தனையோ வெற்றிகளை ஈட்டிடத்தக்க இயல்பும் திறமையும், அந்தச் சிறிய வடிவங்களிலே இடம் பெற்றுள்ளன; அவைகளைக் கண்டறிந்து, வகைப்படுத்தி, வளரச்செய்தால், சமூகம் புதுப் புதுப் பொலிவுகளைப் பெற்றிடும். பிள்ளைப் பருவம், பெற்றோர் அள்ளிப் பருகிடும் இன்பம் என்பது மட்டுமல்ல, அது வெப்பம் ஏருத வெய்யில்; மாசு ஏருத பொன்; விலை

குறித்திடவொண்ணாத முத்து; ஒளிவிடு மணி, ஒப்பற்ற மாணிக்கம்; உருவெடுத்த இளங்காற்று; பேச்சால் இசை அளித்து நமை மகிழவைக்கும் பெம்மான்! ஆம்! தரணியிலுள்ளோர், எத்தனையோ விஷயங்களில் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் குழந்தைகள் பற்றிய நினைப்பிலே மட்டும், ஒரேவிதமான கருத்தினையே கொண்டுள்ளனர்! மனிதர் மட்டுமா!! உயிரினங்கள் யாவுமே! தாய்ப்பசு நாவால் தடவிக் கொடுத்திட, பெருமிதத்துடன் நின்றிடும் கன்றும், பாலைக் குடித்தபடி உள்ள குட்டியிடம், பாசம் காட்டி நிற்கும் பெண் மானும், மென்று மெதுவாக்கி, வாய்க்குள் கொண்டு ஊட்டும் தாய்ப் பறவையும் அதன் குஞ்சும்—எங்கும் காண்கிறோம் அந்த பாசமலரின் எழிலை; எங்கும் நுகரக் கிடைக்கிறது அந்த அன்புப் பிணைப்பின் நறுமணம்!

‘குழந்தைகள் தினம்’ என்பதனை, கொண்டாடப்படும் பல்வேறு விதமான தினங்களிலே ஒன்று என்று கருதிவிடல் கூடாது—எல்லாவிதமான நாட்களுக்கும், இந்நாள், வித்து.

இத்தகைய இயல்புள்ள நாளையுமா, கட்சிக்கான தாக்கி விடுவது; கருக்கிப் போடுவது.

‘குழந்தைகள் தினம்’ ஒரு குறிப்பிட்ட கட்சிக்குப் பிரசாரம் தேடிக்கொள்ள அமைந்தது அல்ல, அமைத்துக்கொள்வது அழகுமல்ல, அறமுமாகாது.

அன்றாகிலும், பேதமும் பிணக்கும், பூசலும் ஏசலும் அகற்றப்பட்டதோர் இன்பச் சூழ்நிலை எழவேண்டாமா! அந்தப் பிஞ்சு மனங்கள், வழக்கமாக நமக்குள்ள பித்து மனதையா காண இடமளித்திடுவது! தவறு! தவறு! மிகத் தவறு! நாம் குழந்தைகட்குப் பாடம் சொல்லிக் கொடுக்காவிட்டால் போகிறது, அன்று நாம் பாடம் பெற்றுக்கொள்ள வேண்டும், அந்தக் குழந்தைகளிடமிருந்து. அந்தக் கண்ணொளி, நமது மனஇருளை ஓட்டிட வேண்டும்! அந்தப் புன்னகை, நமது வஞ்சக நினைப்புகளைப் போக்கிட வேண்டும்! அந்த கள்ளம் கபடமற்ற தன்மை, நமது உள்ளக் குகையிலே ஒளிந்து நெளியும் பொறாமை, பொச்சரிப்பு, எனும் நச்சுக் காற்றை அகற்றிவிட வேண்டும்; குழந்தை மனம் நாம் பெறவேண்டும்; ஆண்டுக்கோர் நாளாகிலும்; அதற்கு அந்நாள் தூயநோக்குடன் நடத்தப்பட வேண்டும்.

மழலைச் செல்வத்தை பழந் தமிழகப் புலவர் பெருமக்கள், படிக்கப் படிக்க இனிப்பளித்திடும் பாக்கள் பாடிப் போற்றியுள்ளனர்.

படித்துப் பொருளறிந்திட இயலாதார்க்கும், இயற்கையாகவே கிடைத்திடும் உணர்வு, இந்தப் பாசம்; உண்மை; மறுப்பார் எவரும் இல்லை; எனினும் நாடு உள்ள நிலையில், சமூகத்தில் நாம் புகுத்தி வைத்துள்ள பேத உணர்ச்சிகள் தலைவிரித்தாடிடும் நிலையில், குழந்தைகளை, அவர்கட்கு அமைந்துவிட்டுள்ள இயல்புகள் இனிமை மிகு வளர்ச்சி பெற்று, சுவை மிகு பயன் சமூகத்துக்குக் கிடைத்திடத்தக்க விதமாக, வளர்த்திடச் செய்திடும் வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் இன்றைய சமூகத்திலே எத்தனை பேர் உளர்? நினைக்கும்போதே, நெஞ்சு நடுக்குறும். ஏழ்மையும் அதன் தொடர்பான அறியாமையும் கப்பிக்கொண்டுள்ள குடும்பங்களிலே உள்ள குழந்தைகளைத் தாய், மாளிகைச் சீமாட்டியைவிட அதிகமாக அணைத்துக் கொஞ்சி, “ஆருயிரே! ஆணழகே! ஆளப் பிறந்தவனே! என ஆவிக்கோர் ஆவியே! கண்ணே! கருமணியே! கட்டிக் கரும்பே! என்றெல்லாம் கொஞ்சத்தான் செய்கிறார்கள்; ரோஜாவே! மலரே! மருக்கொழுந்தே! முல்லையே! மல்லியே! என்று கூறி உச்சி முகர்ந்து, அத்தனை மணமும் ஆங்கு உளது என்று அகமகிழத்தான் செய்கிறார்கள்; பொன்னே! மணியே! முத்தே! மாணிக்கமே! பச்சை மணியே! பவளக்கொத்தே! வைரமே, வைடூரியமே! என்றெல்லாம் கொஞ்சுகிறார்கள்; குழந்தையைத் தூக்கிவைத்துக் கொள்ளும்போது அத்தனை செல்வத்தையும் ஒருசேரப் பெற்றதாகவே எண்ணிப் பெருமிதம் கொள்கிறார்கள். எனினும், குழந்தையும் ஏழ்மையும் கைகோர்த்துக்கொண்டு வளருகிறதே, என் செய்வர்! மலர், வாடக் காண்கின்றனர், மனம் வெதும்பிக் கிடக்கின்றனர்!!

பிறந்தநாள் இருந்த அழகு, வளருகிறது, நிலவு போல...ஆனால் பிறிதோர் நாள் தேய்பிறையாகிறது... மீண்டும் வளர்பிறையின் வண்ணம் வருவதும் இல்லையே! என் செய்வர்!!

ஏதேதோ எண்ணங்கள், இன்பக் கனவுகள், ஆசை அலைகள், குழந்தையைக் கொஞ்சிடும்போது; எப்படி எப்படியோ உருக்குலைந்துபோகின்றன அந்த ஆசைகள், எண்ணங்கள். குழந்தை வளர வளர, வறுமை அந்தக் குடும்பத்தைக் கொட்டக் கொட்ட, பொன்னிறமேனி புழுதிபடிந்த உருவமாகிவிடுகிறது! வடிவழகு குலைகிறது, வண்ணம் கலைந்துபோகிறது, கண்ணிலிருந்த ஒளி மறைகிறது, எலும்புந்தோலுமான உருவமாகிவிடுகிறது. ஆளப்பிறந்தவனே! என்று தொட்டிலிட்டு ஆட்டி மகிழ்ந்ததாய்; சிறுவன் மாடோட்டும் சிறு கோல் தூக்கிடும் நிலையைக் காணவேண்டி வந்துவிடுகிறது: வறுமைத் தீ ஆயிரம் ஆயிரம் மொட்டுகளை மலரவிடாமல் கருக்கிவிடுகிறது!! புன்னகை புகைந்தே போய்விடுகிறது; ‘குடும்ப பாரம்’ என்ற சொல் பிறக்கிறது; ஏன் பிறந்தாய் மகனே! என்ற ஏக்கக் குரலொலி கிளம்புகிறது.

‘குழந்தைகள் தினம்’ நமக்குத் தரவேண்டிய, மிக முக்கியமான, அடிப்படை என்று கூறத்தக்க பாடம், நச்சுக் காற்றை அடக்காவிட்டால் நடமாடுவன நாசமாவதைத் தடுத்திடமுடியாது என்பதுபோல, பாசனம் அற்றுப்போனால் வயல் வறண்டிடாமல். பயிர் கருகிடாமல் தடுத்திட முடியாது என்பதுபோல, வறுமைப் புயல் வீசியபடி இருப்பதைத்தடுத்திட வழிகண்டு பயன்படுத்தாவிட்டால், அரும்பாகஉள்ள குழந்தைகள், கருகிய மொட்டுகளாகிவிடும், பூங்காவாகச் சமூகம் இராது பாலையோ, பாழ்வெளியோ என்று கருதத்தக்க இடமாகிவிடும் என்பதனைத்தான்.

இந்த உண்மையை உணர்ந்து, வறுமையை நீக்கிட வழி தேடவேண்டும். உள்ளதையும் கிடைப்பதையும் சில இடங்களிலேயே ஒடுக்கிவிடாமல், எங்கும் சென்று பயன் தந்திடத்தக்கவிதமாகப் பரவவிட வழி கண்டறிந்து அதன்படி நடந்திடவேண்டும் என்ற உறுதிகொள்ளவேண்டும்.

வறுமையும் இன்றுள்ள பேதமும் நீடிக்குமானால், குழந்தைகள், சமூகத்திலே வெறும் நீர்க்குமிழிகளாகிவிடும் நிலையே காணப்படும்.

(15-ம் பக்கம் பார்க்க)



திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சி காண்பது, ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட ஒரு முறை யாகும்.

அதது அததன் வழியே சென்று' ஒன்ருெடொன்று உரசி, மோதி அல்லதுதழுவி, பிணைந்து இறுதியில் ஏதேனும் ஓர் வடிவம் கொண்டு அதற்குத் தக்கதோர் பலனைப் பெற்றுத் தரும் என்பது, பலவித மான சீர்கேடுகளையும் குலைவுகளை யும் தந்ததனைக் கண்ட பிறகு, திட்ட மிட்டுக் காரியமாற்றும் முறை மேற் கொள்ளப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்ருண்டுக்குப் பிறகு, தன்னிச்சையாக வளரவிடு வது, ஒன்ருேடொன்றுதாராளமாகப் போட்டி போட்டுக்கொண்டு கடைசி யில் வலுவுள்ளது நிலைப்பது என்ற பழைய ஏற்பாடுகள் கைவிடப்பட்டு விட்டன; திட்டமிடுதல் மேற் கொள்ளப்பட்டது.

மக்களுக்கும் துரைத்தனத்துக் கும் உள்ள தொடர்பு குறைவாக இருந்த காலத்தில், அமளிகளைத் தடுக்கவும் போர் மூண்டால் சமாளிக்கவும் மட்டுமே அரசு இயங்கி வந்தது.

அந்த நாட்களில், குடிமக்கள் தனித்தனியாகவோ குழுக்களாக அமைந்தோ, தமது வாழ்க்கைக்குத் தேவைப்படும் எல்லாக் காரியங்களை யும், அரசின் துணையை நாடாமல், தாமாகவே செய்துகொண்டு வந் தனர்.

நாளாகவாக, வாழ்க்கை செம்மை யாக நடப்பதற்குத் தேவைப்படு பவைகள் அதிகமாயின; சிக்கல்கள் மிகுந்து காணப்பட்டன; அரசின் துணை நாடப்படவேண்டியதாயிற்று.

தனி மனிதன், தன் வாழ்விலே, தானாகவே விரும்பி வேண்டி அரசு தலையிட்டுச் சீர்செய்தளிக்க வேண் டும் என்று கேட்டிட வேண்டிய தாயிற்று.

தொழில் முறைகளில் புதுமை கள் நுழைந்தன, வெறும் உழைப்பு மட்டும் போதாது, அது தக்க பலன் தந்திடவேண்டுமானால், 'மூதல்' தேவை; தொழிலை நடாத்திடும் 'நிர்வாகம்' தேவை என்ற உணர்வு கள் மேலோங்கின.

பொருள் ஈட்டிடும் வழிகள் பலப் பலவாயின. பொருள் மிகுதியாக ஈட்டிட வேண்டும் என்ற அரிப்பு அதிகமாக அதிகமாக, பிறருக்குச் சென்றிடும் பொருளின் அளவைக் குறைக்கவும், மறைக்கவும், மறுக்க வுமான எண்ணம் எழுந்தது; அந்த எண்ணம் ஏற்பாடுகளாக வடிவ மெடுத்தன. பொருள் சிலரிடம் குவிந்திடவும், பொருள் உற்பத்திக் குக் காரணமாக இருந்த பலர் பொருள் கிடைக்கப் பெருதோராகவு மாயினர். பொருள் ஈட்டிக் குவித்து வைத்துக் கொண்டவர்களிடம், பொருளற்ற உழைப்பாளர், போட்டி யிட, எதிர்த்து நிற்க இயலாத நிலை ஏற்பட்டது. தமது உழைப்பு பறிக் கப்படாதிருக்க, பாதுகாப்பு தேடிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் பாதுகாப்பைத் தரவேண்டி யது அரசுதான் என்ற கொள்கை பிறந்தது. அரசு, தொழில் நடாத்து வோருக்கும் தொழிலில் ஈடுபட்டு உழைப்போருக்கும் இடையே நின்று முறைகளை வகுத்திட வேண்டி ஏற்பட்டது.

பொருள் ஈட்டுவோர்களுக்கிடை யில் போட்டிகள் மிகுந்தன; போட்டி கள் பூசல்களாயின; இதனால் ஏற் பட்டுவிடும் கேடுபாடுகளைத் தவிர்க்க வும் அரசு தலையிடவேண்டி வந்தது.

சி. என். ஏ.

பொருள் மிகுதியாகப் பெற்றோர், பிறரை அடிமைகொள்ளவும், அரசி னையே ஆட்டிப் படைக்கவுமான வலிவினைப் பெற்றது கண்டு, அந்த வலிவினைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமையும் அரசுக்கு ஏற்பட்டது.

இதுபோல பல்வேறு நிகழ்ச்சிகள் மாறுதல்கள் காரணமாக, இனி அரசு எதனையும் திட்டமிட்டுச் செயல்படுத்தவேண்டும், அப்போது தான் சீர்குலைவுகள் ஏற்படாமலிருக் கும், வலியோர் எளியோரை வாட்டி டும் கொடுமையை நீக்க முடியும், நேரக்கேடு, பொருள்கேடு ஆகிய வற்றினைப் போக்க முடியும் என்ற எண்ணம் எழுந்தது.

திட்டமிட்டு, நாட்டின் பொருளா தார வளர்ச்சியைக் காண்பது என்ற முறை தோன்றித் தீரவேண்டிய தாயிற்று. இப்போது, திட்டமிட்டுச் செயல்படும் முறையை, வேண்டா மென்று கூறிடுவார் இல்லை.

திட்டமிடுதல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

அதனை ஏற்றுக்கொண்டான பிறகு, குறைகூறலாமா என்று கேட்கின்றனர் சிலர்; நடப்பது நடக் கட்டும், கிடைப்பது கிடைக்கும் என்ற தான்தோன்றிமுறை ஒழிக்கப் பட்டு திட்டமிடுவது மேற்கொள்ளப் பட்டதற்குக் காரணமே பழைய நிலைமையில் நெளிந்து கிடந்த கேடு கள் புது முறையினால் நீக்கப்பட்டு, நீதி நிலைத்திடும் என்பதனால்தான்.

இந்த நோக்கம் ஈடேறுகிற முறை யில் திட்டமிடுதல் இருக்கிறதா?

செயல் மேற்கொள்ளப் படுகிறதா? பலன் கிடைத்து வருகிறதா? என்று கண்டறிந்திடுதல் தவறு ஆகாது; சொல்லப்போனால், அது திட்ட வெற்றிக்கே மிகவும் தேவைப்படுவதாகும்.

திட்டமிட்டு வளர்ச்சி காண்கிறோம் என்று கூறிவிடுவதாலேயே, எல்லாம் செம்மையாக நடந்திடும் என்று எண்ணிக்கொண்டுவிட முடியாது.

திட்டமிடும் முறை, தீட்டப்பட்ட திட்டத்தின் தன்மை, திட்டம் செயல்படுத்தப்படும் முறை, செயல்படுத்துவோரின் திறன், திட்டம் செயல்படுத்தப்படும்போது எழுந்திடும்சூழ்நிலை, கிடைத்திடும் பலன், அதன் தரம், வகை, ஏனும் இவ்வளவையும் ஒவ்வொரு கட்டத்தின்போதும், சரிவர இருக்கிறதா என்று கவனித்து வந்தாலொழிய, கண்காணித்து வந்தாலொழிய குறைகள் தெரியுமிடத்துக் களைந்திட்டாலொழிய, முறைகள் செம்மையாக இல்லை என்பது புரியும்போது, செம்மைப்படுத்தினாலொழிய, திட்டமிடுதல் என்பது, தக்க பலன் கொடுக்காததுடன், மக்களுக்குப் பெரும் சுமையாகி, திகைப்பையும் ஏமாற்றத்தையும் கொடுத்து, அரசினை ஒரு கொடுமைக் கூடமாக்கிவிடும்.

ஆகவேதான், திட்டமிட்ட பொருளாதார முறையிலே குறைகள் தென்படும்போது, துணிவுடனும் கடமை உணர்ச்சியுடனும்; எடுத்துக் கூறவும்; எதிர்த்து நிற்கவும் வேண்டி வருகிறது.

இந்தப் போக்கு, திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியைக் காணும் முறைக்கு, வெற்றியைத் தேடித் தருவதாகவே அமையும். இதை அறியாதாரே, எமது திட்டங்களையா எதிர்க்கிறீர்கள்? எமது திட்டங்களிலேயா குறை காணுகின்றீர்கள்? என்றெல்லாம் கதைக்கின்றனர்.

இன்றும்கூட, இங்கு மட்டும் அல்ல, பல்வேறு நாடுகளிலேயும், சாமான்யர்கள் அல்ல, நிபுணர்களில் சிலரேகூட பழைய ஏற்பாட்டினை விட திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சி தேடுவது எந்தவிதத்திலும் விரும்பத்தக்கது அல்ல என்ற கருத்தினைக் கொண்டுள்ளனர்.

இவர்கள், தனிமனிதனுடைய செயல்களில், அரசு தலையிடுவது தேவையில்லை. தீமை பயக்கும், உரிமைகளை அழித்தொழிக்கும் என்று எண்ணுகின்றனர்.

இவர்கள், சர்க்காரின் தலையீடுகளை அய்யப்பாடுடனும் அச்சத்துடனும் அருவருப்புடனும் நோக்குபவர்.

இத்தகையோர்களின் எண்ணிக்கையும் குறைவு; இவர்களின் பேச்சின் வலிவும் நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது.

இவர்கள், தனிமனிதன் உரிமைகள் என்று வாதாடுவதெல்லாம், கடைசியில் பெரிய புள்ளிகளிடம் மக்களை ஒப்படைத்துவிடும் காட்டுமுறைக்குத்தான் கொண்டு சேர்க்கும் என்று கூறி, திட்டமிடுதலை ஏற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கையே வளர்ந்து வருகிறது.

திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது; விரும்புகிறது. ஆனால் அது செம்மையாக இருக்க வேண்டும், எதிர்பார்த்திடும் பலனைப் பெற்றுத் தருவதாக இருக்கவேண்டும் என்று கூறுகிறது.

திட்டங்களிலே காணப்படும் குறைகளை எடுத்துக் காட்டுவது, திட்டமிடும் முறையையே எதிர்ப்பது என்றாகிவிடாது. திட்டமிட்டுவிட்டோம் என்று அறிவிப்பவர்கள், பலன் கிடைத்திடும் என்ற உத்திரவாதம் தரவும் அதனை நிறைவேற்றிக் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்; அந்தக் கடமையினின்றும் அவர்கள் தவறுவார்களானால் இடித்துரைக்கும் பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது; குறிப்பாக திட்டமிடும் முறையை ஆதரிப்பவர்களுக்கு அந்தப் பொறுப்பு அதிக அளவில் இருக்கிறது.

எனவே திட்டங்களிலே உள்ள குறைபாடுகளைக் கண்டிப்பது பொறுப்பற்ற செயல் அல்ல; பொறுப்புணர்ந்தோரின் கடமையாகிறது.

திட்டமிடும் முறையில்லாதபோது ஏற்பட்டுவிடும் கேடுபாடுகளுக்கு இன்னார்தான் பொறுப்பு என்று கூறிட முடியாது—ஏனெனில் பலரும் பல்வேறு விதமான முறையில் அவரவர் விருப்பம்போலச் செயல்பட்டு வருகிறபோது, கேடுபாடுகள் எழக் காரணம் யார் என்று கூறிட இயலாது போய்விடுகிறது

திட்டமிடுவது என்பது அது போன்றதல்ல.

அரசு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது; சமூகம் அனுமதி

நொந்த உள்ளமும் நெறித்த புருவமும்

அளித்துவிட்டிருக்கிறது. ஆகவே பொறுப்பேற்றுக் கொண்ட அரசு, அனுமதி அளித்த சமூகத்துக்கு பதில் அளித்தாக வேண்டும்; நெறித்த புருவம் காட்டுவது கூடாது; என்னமோ இதுபோல நடந்துவிட்டது என்று கூறிப் பொறுப்பைத் தட்டிக் கழித்திடவும் முடியாது.

திட்டமிடும்முறையை மேற்கொள்ளும் அரசு, மிகப்பெரிய பொறுப்பை மேற்கொள்ளுகிறது; அதுபோலவே சமூகம் மிகப் பெரும் அளவுக்கு, உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட்டிருக்கிறது. இந்நிலையில், திட்டமிட்டு வளர்ச்சி காணும் முறையில் குறை காணும்போது, கண்டிக்கவே கூடாது என்று பேசுவது பேதமை; அஃது இயலாமையை மறைக்க மேற்கொள்ளப்படும் இறுமாப்புமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம், திட்டங்களின் விளைவுகளைக் குறித்து அவ்வப்போது குறைகளை எடுத்துக் காட்டிக்கொண்டு வந்தது, காங்கிரசாருக்குக் கடுங்கோபத்தை மூட்டிவிட்டது.

திட்டத்தின் விளைவுகள், மகிழ்ச்சி தரத்தக்கதாக, எதிர்பார்த்த வகையினதாக, எல்லோருக்கும் பயன் தருவதாக இல்லை என்று கழகம் கூறியபோதெல்லாம் காங்கிரசார் எறிந்து விழுந்தனர்; ஏசித் திரிந்தனர்; கழகம் திட்டத்துக்கு விரோதி என்று இட்டுக்கட்டிப் பேசினர்;

கழகம் கவலைப்படாமலும், கலக்கம் கொள்ளாமலும், திட்டம் பற்றிய தனது கருத்தினைத் தொடர்ந்து மக்கள் மன்றத்திலே தெரிவித்து வந்தது.

கழகம் மேற்கொண்டதுபோலவே வேறு சில முற்போக்குக் கருத்தினரும், திட்டங்களிலே காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் கூறிக் கண்டித்து வந்தனர்.

இந்தக் கண்டனங்கள் பயனற்றுப் போய்விடவில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று, அரசு அளித்திடும் வலிவின் நிழலில் நிற்போர் பேசிவந்தனர் என்ருலும், காங்கிரசிலும், அரசிலும் உள்ள நேர்மையாளர்கள் மனதிலே கொந்தளிப்பும் குழப்பமும் மூண்டது. உண்மைதானே! உண்மைதானே! என்று மனதுக்குள் கூறிக்கொண்ட வண்ணம் இருந்தனர். திட்டம் சரியான வழியிலே செல்லவில்லை என்பதனையும் மெள்ள மெள்ள உணர்ந்தனர். திட்டத்தின் காரணமாக கிடைக்கவேண்டிய பலன் சரியான அளவுக்குக் கிடைக்கவில்லை என்பதும் புரிந்தது. திட்டத்தைப் பற்றி, தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

பதினேழு ஆண்டுகள் உருண்டோடி விட்ட பிறகு, பலப்பல ஆயிரம் கோடி ரூபாய்களைக் கொட்டி வீணுக்கியான பிறகு, திட்டம் பற்றி புதிய முறையில் சிந்தித்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்; இது காலம் கடந்ததல்லவா என்று பலருக்குத் தோன்றும்.

இப்போதாவது இந்த எண்ணம் வந்ததே என்பது குறித்து மகிழத்தான் வேண்டும். இவ்வளவு காலமாகப் பலரும் இடித்துரைத்து வந்ததன் விளைவு இப்போதாகிலும் தெரிகிறதே என்பதிலே மகிழ்ச்சிகொள்வதிலே நியாயமும் இருக்கிறது.

திட்டங்களைத் தீட்டுபவர்கள்' மக்களின் தேவைகளை அறிந்து கலந்து கருத்தறிந்து தீட்டவில்லை. திட்டக் கமிஷன் என்ற குழு எவருக்கும் கட்டுப்படத் தேவையில்லாத ஒரு தனி அரசாக, அரசையே ஆதிக்கம் செலுத்தும் விதமாக இருக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துப் பேசாத காங்கிரஸ் தலைவர்களே இல்லை என்று கூறலாம்.

சட்டசபைகளிலே, திட்டக் கமிஷன் ஒரு தனிப்பெரும் அரசாக ஆதிக்கம் செய்கிறது என்று கூறிய போதெல்லாம், அமைச்சர்கள் சீறி எழுவர்; விவரமறியாத பேச்சு இது! திட்டக் கமிஷன் வெறும் யோசனை கூறும் அமைப்பு! என்று அடித்துப் பேசி வந்தனர்.

மந்திரிகளும் மடிப்பிச்சைகளும்

மந்திரிகள் அடித்துப்பேசும்போது மடிபிச்சைகளைப்பற்றிச் சொல்லவா வேண்டும்; மீசை துடித்திடக் கூவின, கொக்கரித்தன.

ஆனல் இப்போது மெள்ள, மெள்ள, திட்டக்கமிஷன் ஒரு தனி அரசுபோல ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பது சரியல்ல, முறையாகாது என்ற எண்ணம் காங்கிரஸ் அரசில், மேல் மட்டத்திலேயே ஏற்பட்டு வருகிறது.

திட்டக் கமிஷன் உறுப்பினர்களின் காலம் நீடித்துக் கொண்டே போவதை லால்பகதூர் விரும்பவில்லை என்றும், திட்டக் கமிஷனில் பலப்பல துறைகளிலே நிபுணர்களாக உள்ளவர்கள் இடம் பெறும்படியாக, அந்த அமைப்பு திருத்தி அமைக்கப்படவேண்டும் என அவர் விரும்புகிருர் என்றும்,

பேசிக்கொள்ளப்படுவதைக் கேட்க முடிகிறது.

திட்டக் கமிஷன் என்பது எல்லாம் அறிந்த, எவருக்கும் எதற்காகவும் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய அவசியமற்ற, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பார்வைக்கும் கேள்விக்கும் படாமல், மேல் நிலையில் உள்ள ஒரு அமைப்பு என்றநிலை இருப்பதனைக் கண்டித்தோம்; காங்கிரசார் கடுங்கோபம் கொண்டெழுந்து, "ஏடா! மூடா! என்ன தெரியும் உனக்கு, திட்டக் கமிஷன் விஷயமாக!! என்று பேசினர். பொறுத்துக்கொண்டோம்! சலிக்காமல் கண்டனம் செய்தபடி இருந்துவந்தோம். இப்போது, உண்மை நிலைமையை, கசப்பானது என்றபோதிலும் ஒப்புக்கொண்டாக வேண்டியகட்டம் பிறந்திருப்பதனைக் காண்கிருேம்.

திட்டக் கமிஷனில் உள்ளவர்கள், மக்களின் நிலைமையை உணராமல் எதை எதையோ ஏட்டில் தீட்டிவிடுகிருர்கள். நாட்டு நிலைமைக்கும் இந்த ஏட்டளவு உள்ள திட்டங்களுக்கும் பொருத்தம் காணேம். திட்டம் பலன்தரத் தக்கதாக இருக்கவேண்டுமானல், மேலே இருந்து அல்ல, கீழ்மட்டத்திலிருந்து யோசனைகள் உருவாக்கப் படவேண்டும்.

இதனைக் கூறியபோது, காங்கிரசில் உள்ளவர்கள் எரிந்து விழுந்தனர். இப்போது திட்டம் தீட்டுவதன் பொறுப்பிலே பெரும் அளவு, பிரதேசங்களே மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படப்போவதாகத் தெரிய வருகிறது. கண்டனம் பலன் தருகிறது என்பதே இதற்குப் பொருள்.

பெரும் பெரும் அளவுள்ள தொகையை நீண்டகாலத்திற்குப் பிறகே பலன் தரத்தக்க அமைப்புகளிலே கொட்டிக்கொண்டிருக்கிறீர்கள். உடனடிப் பலன் கிடைக்காமல் மக்கள் திண்டாடுகிருர்கள். அவர்களுடைய அன்ருடத் தேவைகளுக்கான பண்ட உற்பத்தி பெருகும்விதமாகத் திட்டம் இருக்கவேண்டும் என்று கூறினபோது, திட்டத்தின் இலக்கணமே புரியாமல் பேசுவதாக ஏசினுர்கள்.

இப்போது லால்பகதூர் இனி குறுகிய காலத்தில் பலன் தரத்தக்கதும் மக்களின் அன்ருடத் தேவைகளுக்கான பண்டங்களைப் பெற்றுத் தருவதுமான அமைப்புக்களுக்கே, திட்டத்தில் முதலிடம் தரப்படும் என்று அறிவித்திருக்கிருர்.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி என்பது செல்வத்தைப் பெருகச்செய்துவிடுவதாக இருந்துவிட்டால்மட்டும்போதாது. செல்வம் சீராக சமுகம் முழுவதற்

பாலபாட போதகாசிரியர்கள்

கும் பரவவேண்டும்;" அதற்கு ஏற்றவிதமாகச் செயல்பட வேண்டும் என்று கூறினோம்.

பொருளாதாரத்தின் அரிச்சுவடியே உங்களுக்கெல்லாம் தெரியாது; அதனால்தான் குளறுகிறீர்கள். முதலில் உற்பத்தி! மேலும் மேலும் உற்பத்தி! வேகமான உற்பத்தி! அந்த உற்பத்தி பெருகினால், தன்னாலே செல்வம் கொழிக்கும், பொங்கி வழியும், சமுகம் முழுவதும் பரவும், எல்லோருக்கும் பலன் கிடைக்கும், சீரான பங்கீடு ஏற்பட்டுவிடும்; முதலில் உற்பத்தி! என்று பாலபாட போதகாசிரியராயினர்!

திட்டத்தின் காரணமாக நாட்டின் மொத்தச் செல்வம் வளர்ந்திருக்கிறது என்றாலும், தனி நபரின் நிலை அதற்கு ஈடாக வளரவில்லை என்பதனையும்,

உற்பத்தியான செல்வம் ஒரு சிலரிடம் சென்று சிக்கிக் கொண்டுவிட்டது என்பதனையும், உற்பத்திச் சாதனங்களை முன்னைய காலத்தைவிட பெரிய புள்ளிகள் தம் கரத்தில் வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதனையும்,

பாலைவனம்

பொருளாதார ஏகாதிபத்யம், வளர்க்கப் பட்டுவிட்டிருக்கிறது என்பதனையும்,

திட்டமிட்ட பொருளாதார முறையினால் கிடைக்கும் சர்க்கார் வழங்கும் கடன், மானியம், வசதி, வாய்ப்பு என்பவைகளை 'மேட்டுக் குடியினரே' மிகப் பெரும் அளவுக்குப் பயன்படுத்திக் கொழுத்துள்ளனர் என்பதனையும், ஒப்புக்கொண்டு இது பற்றி ஆராய்ந்திட, மகனோலாபிஸ் கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும், திட்டத்தின் பலன், சீராக சமூகத்தில் பரவவில்லை என்பதனை அறிவித்திருக்கிறது. திட்டம் சரியான முறையிலே இல்லை, ஏழை மேலும் ஏழையாகிறான், [illegible]ணக்காரன் மேலும் பணக்காரனாகிறான் என்று சொன்னபோது. எத்தனை எத்தனை தடித்த சொற்கள் கொண்டு தாக்கினர், தர்பாரில் இடம்பெற்றோர். ஏழையின் வாழ்வில் ஒளி கிடைத்திருக்கிறது என்று பேசி உருகியோரும், பாலைவனம் சோலைவனமாகிவிட்டது என்று பாடல் புனைந்து பரவசம் அடைந்தோரும், கிராமங்களிலே சுபீட்சம் தெரிகிறது, சேரிகளிலே வெள்ளிப் பாத்திரங்கள் மின்னுகின்றன! என்று பெருமிதம் காட்டிப் பேசியோரும்—இப்போதும் உளர்–வாயடைத்த நிலையில் என்று கூற வேண்டி இருக்கிறது. ஏனெனில், திட்டம் காரணமாக ஏழைக்கு உரிய பங்கு கிடைத்திருக்கிறது என்று பேசிக்கொண்டு வந்த காங்கிரசாரின் மண்டையில் அடிப்பது போல மகனோலாபிஸ் குழு அறிக்கை வெளிவந்திருக்கிறது.

திட்டம் போடப்படும் முறையினால், வடபுலம் தொழிற்துறையில் மேலோங்கியும் தென்னகம் தேய்ந்தும் வருகிறது என்று கூறியது கேட்டு, தீமிதித்சோர்போலானோரும், தேசபக்தி பழிக்கப்படுவதாக எண்ணிக்கொண்டு ஆவேசமாடினோரும் நிறையப்பேர்!

இப்போது இந்த உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதுடன் தென்னகம் விழிப்பாக இருந்து, திட்டத்திலே தனக்குரிய பங்கு, தொழில் துறையில் கிடைக்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டிப் போரிடுவதைக் காண்கிறோம்.

சோலைவனம்

இவ்வளவுக்குப் பிறகும், சேலம் உருக்காலைத்திட்டம் தேய்ந்த கனவாகிப் போயிருப்பதனைப்பார்க்கிறோம்.

ஆகிவிட்டதென

இங்கு ஏன் அது இல்லை, இதுஇல்லை? அதுஏன் அங்கு இருக்கிறது? என்றெல்லாம் பேசுவது பேதமை, குறுகிய மனப்பான்மை! எந்த அமைப்பு எங்கே இருந்தால் என்ன? எல்லாம் இந்தியாவிலேதானே இருக்கிறது! பலன், இந்தியா முழுவதற்கும்தானே கிடைக்கிறது! பெருமை, இந்தியா முழுவதற்கும்தானே! — என்றெல்லாம், பேசியவர்களே இப்போது, எங்கள் பிரதேசத்தில் இன்னின்னது இல்லை; அவசரமாகத் தேவை; அதைக் கேட்பதிலே நியாயமிருக்கிறது, உரிமை இருக்கிறது என்று அடித்துப் பேச முற்பட்டுள்ளனர்.

திட்டங்கள் அமைகின்றமுறை மத்திய சர்க்காரிடம் மானியத்துக்காகவும் கடனுக்காகவும், உத்திரவுக்காகவும் சலுகைக்காகவும்காத்துக்கிடந்திடும்நிலையை, காவடி தூக்கிடும் நிலையை 'ராஜ்யங்களுக்கு' உண்டாக்கி வைத்திருக்கிறது என்று கூறிக் கண்டித்தபோது, ராஜ்ய மந்திரிகள், அதிலும் அதிதீவிரமாக நமது மாநில அமைச்சர்கள் சீறிப் பேசினர்–இது பிளவு மனப்பான்மை — பேதப் பேச்சு என்றெல்லாம்.

இப்போது, ராஜ்யங்களின் நிலைமை மத்திய சர்க்காரை நத்திப் பிழைப்பதாக இருக்கிறது என்பதுபற்றி, மந்திரிகளே வெளிப்படையாகப் பேசவும் அது குறித்து வருத்தம் தெரிவிக்கவும் கோபம்கொள்ளவும் தலைப்பட்டுள்ளனர்.

எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரிடம் போய் நின்றாக வேண்டியுள்ள நிலையை வெறுப்பவர்போல முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே சின்னாட்களுக்கு முன்பு டில்லியில் மத்திய சர்க்கார் தலைவர்கள் முன்னிலையில் துணிந்து பேசியதாக இதழ்களில் பார்க்கிறோம்.

திட்டங்களிலே காணப்படும் குறைகளை எடுத்துக்கூறிவந்தது மெள்ள மெள்ளப் பலன் தந்து வருகிறது என்பதை மெய்ப்பிக்கும் நிகழ்ச்சிகளும், பெரியஇடத்தாரின் பேச்சுகளும், வெளிவந்தவண்ணம் உள்ளன.

பாடல்!

திட்டம் போட்டுக் காட்டும்போது என்னென்ன, எங்தெந்த அளவுக்கு பெற்றுத்தரப்படும் என்று கணக்கிடுகிறார்களோ அதன்படி கிடைப்பதில்லை; அளவு குறைந்துவிடுகிறது. குறிப்பிட்ட அளவும், அதற்கு அதிகமாகவும் கூட, பணம் செலவாகிறது, ஆனால் குறிப்பிட்ட 'இலக்குகளை' அடைய முடியவில்லை. இதற்குக் காரணம், காலதாமதம், நிர்வாகக் குறைபாடு, ஊழல் என்று கூறியதை, காங்கிரசின் பெருந்தலைகளும், நீண்ட நாவினரும் பலமாகக் கண்டித்தனர்; மறுத்தனர்.

இப்போது, மதிப்பீடுகள்–ஆய்வுகள் –மேற்கொள்ளப்பட்டு, பலவற்றிலே இந்தக் குறைபாடுகள் உள்ளன என்பது கண்டறியப்பட்டு, திருத்தங்களை மேற்கொண்டாகவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திட்டங்களுக்காகப் பணத்தைக் கொட்டிச் செலவிட்டபோது, அதன் மூலமாக எந்த அளவு பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ, வாக்களிக்கப்பட்டதோ அதனை நிறைவேற்றவில்லை. போட்ட முதலுக்குத் தக்க 'வருவாய்' பெறப்படவில்லை. வட்டிகூடக் கிடைக்கவில்லை என்று கூறத்தக்க விதமாகப் பல அமைப்புகள் உள்ளன என்று கூறியபோது, புள்ளிவிவரம் தெரியாமல் பேசுகிறார்கள், பொச்சரிப்பினால் உளறுகிறார்கள் என்றெல்லாம் அறைந்தனர்.

இப்போது நீர்ப்பாசனத்துக்காக ஏற்பட்ட பெரிய அமைப்புகளுக்குச் செலவிட்ட பெருந்தொகைக்கு ஏற்ற விதமானபலனும் வருவாயும் கிடைக்கப்பெறவில்லை என்பதனை, ஒப்புக்கொண்டாகவேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது. மறுத்துப் பேசிவந்த மாபெருந் தலைவர்கள் இப்போது மழுப்பிப் பேசி வருகிறார்கள்; அடித்துப் பேசிவந்த 'ஆதாயம் தேடிகள்' இப்போது அடக்கம் காட்டிவருகிறார்கள். இனியும் இந்நிலை நீடிக்க விடமாட்டோம் என்று ஆறுதல் மொழி பேசுகின்றனர் பொறுப்புணர்ந்த காங்கிரசார்.

திட்டங்கள் அமைந்துள்ள முறை, நகரங்களைப் பெரு நகரங்களாக்குவதாக, வருவாயின் பெரும் அளவு நகரங்களுக்கே போய்ச் சேருவதாக அமைந்திருக்கிறது. கிராமங்கள் முன்னேறினாலொழிய நாடு உண்மையாக முன்னேறியதாகக் கூற முடியாது என்று கூறியபோது, காங்கிரசிலுள்ள கண்ணியர்கள் மறுத்தனர்.

இப்போது, நாட்டிலே மொத்தத்திலே ஒருவரின் சராசரி வருவாய் 306 ரூபாயாகவும், கிராமத்தார்களின் வருவாயைமட்டும் கணக்கிட்டுப் பார்த்தால், கிராமத்தாரின் சராசரி வருவாய் 95-ரூபாய் என்றும், பெரிய காங்கிரஸ் தலைவர் தேபர் தெரிவிக்கிறார். திட்டம் பெற்றுத்தந்த வருவாய் ஏற்கனவே வசதியுடன் உள்ள நகரத்துப் புள்ளிகளுக்குத்தான் பெரும் அளவு போய்ச்சேர்ந்தது என்பதனையும், இந்த முறைகேடு மாற்றப்பட்டாகவேண்டும் என்பதனையும் இப்போது தேபர் நிலையினர் ஒப்புக்கொள்கின்றனர். இதனையே, கழகத்தவர்கள் சொன்னபோது, காங்கிரசார் கடுமையாக எதிர்த்துப் பேசினர்; திட்டத்தை எதிர்ப்பதாக பழி சுமத்தினர். இப்போது உண்மை அவர்களைத் தாக்கித் தாக்கி, திருத்திக்கொண்டு வருகிறது.

கிராமப்புறத்திலே உள்ள குடும்பங்களில் நூற்றுக்கு எண்பது குடும்பத்தினர் மாதம் எண்பது ரூபாய் அளவுக்கே வருவாய் பெறுகின்றனர் என்றும் நூற்றுக்கு ஐம்பது குடும்பத்தினர் மாதம் ஐம்பது ரூபாயே பெறுகின்றனர் என்றும், பலப்பல குடும்பத்தினர் மாதம் இருபது ரூபாய் வருவாய் பெற்று வாட்டத்தால் கொட்டப்படுகின்றனர் என்றும் ஜெயப்பிரகாஸ் நாராயணன் குழுவினர் தெரிவிக்கிறார்கள்.

திட்டங்களுக்காகப் பெரும் தொகைகளைச் செலவிட்டு அதற்கு ஈடான அளவு பண்டம் உற்பத்தியாகாவிட்டால் பண வீக்கம் ஏற்படும்; பணவீக்கம், பல்வேறு கேடுகளையும், ஆபத்துகளையும் மூட்டிவிடும், விலைகள் விஷம்போல ஏறிவிடும், பணத்தின் மதிப்பு தேய்ந்துவிடும் என்று கூறியபோது, வளருகிற பொருளாதாரத்தில் பணப்பெருக்கம் இருக்கத்தான் செய்யும் என்று வாதாடினர்; பணப்புழக்கம் அதிகமாகி இருப்பது சுபீட்சத்தைத்தான் காட்டுகிறது என்றும் பேசினர் பொருளாதார நிபுணர்கள் என்று தம்மைத்தாமே கருதிக்கொண்டு, பாராட்டிக்கொண்டு.

இப்போது, பெரியதலைவர்களிலேயிருந்து அடியவர்கள் வரையிலே பணவீக்கம் ஏற்பட்டுவிட்டதனை ஒப்புக்கொண்டு, அதனால் ஏற்படும் கேடுகளை, பாடம்செய்து ஒப்புவிக்கும் மாணவர்கள்போல, மேடைகளிலே எடுத்துப்பேசிவருகிறார்கள், பணவீக்கம் குறித்து, முன்கூட்டியே எச்சரித்தபோது, எல்லாம் எமக்குத் தெரியும் என்ற முறையில் கூறிவந்தவர்கள் இப்போது என்ன செய்யலாம், எல்லாம் பணவீக்கத்தால் வந்தவினை என்று விளக்கம் அளிக்க முற்படுகின்றனர்.

நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது!

நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதாது என்று கழகம் தெரிவித்தபோது கேலி பேசினர்; இது அடுக்குமொழி என்று கூறினர், தமிழ் இலக்கணத்துக்கு அடுக்குமொழி ஒவ்வாதது என்பதுபோல எண்ணிக்கொண்டு.

இப்போது, கண்ணை மூடிக்கொண்டு நோட்டுகளை அடித்துக் குவித்துக்கொண்டு, வரவு–செலவிலே துண்டு விழுவதை சரிப்படுத்தும் முறை, வரம்பை மீறிவிட்டது என்று அவர்களே பேசுகின்றனர்; இனி முன்பு நடந்ததுபோல நடைபெறாது என்று பேசிவருகின்றனர்.

திட்டம் காரணமாக சர்க்காருக்குப் பெரும் அளவு புதிய அதிகாரங்கள் குவிகின்றன; இந்த அதிகாரத்தை நேர்மையுடன் பயன்படுத்தாவிட்டால், இலஞ்சம் தலைவிரித்தாடும், ஊழல் நாற்றமடிக்கும், ஊதாரித்தனம் மிகுந்துவிடும் என்று கூறியபோது; "ஊழலா! உத்தமராம் காந்தியாரின் வாரிசுகளான எமது ஆட்சியிலா!! இலஞ்சமா? ராமராஜ்யத்திலா! என்று பேசினர், மிகக் கெம்பீரக் குரலில்.

இப்போது இலஞ்சமும் ஊழலும் மிகுந்துவிட்டது என்பதனை ஒப்புக்கொண்டாக வேண்டிய நிலை ஏற்

பட்டுவிட்டது. இதற்காகவே ஒரு தனி முயற்சி, தனிக் குழு, தனிப் படை, அமைத்திட வேண்டி வந்து விட்டது. ஊழலும் இலஞ்சமும், மிக மிக மேல்மட்டம் வரையிலே நெளிகிறது என்பது கெய்ரான் பிரச்சினை மூலம் மெய்ப்பிக்கப்பட்டு விட்டிருக்கிறது. மேலும் பல கெய்ரான்களைப்பிடித்திழுத்துவந்து நிறுத்தித் தண்டித்தாலொழிய, மக்கள் மனதில் பொங்கி எழுந்துள்ள ஆத்திர உணர்ச்சி அடங்காது என்பது ஆளவந்தார்களுக்கே தெரிந்துவிட்டது. ஒவ்வொரு நாளும் மக்கள் இதழைப் பிரிக்கும்போதே, இன்று எந்த அதிகாரி சிக்கிக்கொண்டார், எந்த மந்திரி மாட்டிக்கொண்டார் என்று எண்ணிக்கொண்டேதான், பிரிக்கின்றனர். இலஞ்சமும் ஊழலும், கிளப்பி விட்டுவிட்ட நாற்றத்தை, காங்கிரஸ் மேலிடத்தவர்களால், மறைக்க முடியாது போய் விட்டிருக்கிறது.

திட்டங்களைக் குறித்து மக்களிடம் ஆர்வம் எழவில்லை; காரணம் திட்டங்கள் அவர்களின் வாழ்வைச் செம்மைப்படுத்துவதாக இல்லை என்று கூறியபோது, நம் எதிரே, வண்ணம் மின்னிட, வடிவு மிகுந்திட வெளியிடப்பட்ட திட்ட விளக்க ஏடுகளை, படங்களை, புள்ளி விவரத் தொகுப்புகளை, திறப்பு விழாக்களிலே புன்னகை உதிர்த்திடும் நிலையிலே காட்சி அளிக்கும் அமைச்சர்களின் புகைப் படங்களை, பொலி காளையைத் தடவிக் கொடுக்கும் மந்திரி, மல உரக் குழி திறப்பு விழா செய்யும் மந்திரி, கோழிக் குஞ்சுகளைக் கண்டு குதூகலிக்கும் நிலையிலே ஓர் மந்திரி, கொடி முந்திரிக் கொத்தை கரத்தில் கொண்ட நிலையில் காட்சி தரும் மந்திரி, நரிக்குறவர்கள் மத்தியில் நிற்கும் மந்திரி, நாட்டியமணிகளின் கிராமீய நடனம் கண்டு களித்திடும் மந்திரி, என்ற இவ்வித மான புகைப் படங்கள் நிரம்பிய புத்தகங்களை எடுத்தெடுத்து வீசி, ஆர்வம் காட்டவில்லையா மக்கள்! ஆதரவு தரவில்லையா மக்கள்! பார்! படங்களைப் பார்! புள்ளி விவரங்களைப் படி! திறப்பு விழாச் சொற்பொழிவுகளைப் படி என்றெல்லாம் மிரட்டினர்.

இப்போது, திட்டத்துக்கும் பொது மக்களுக்கும் உள்ள தொடர்பு எவ்விதம் இருக்கிறது என்பதனைக் கண்டறிய முயற்சி எடுத்துக்கொண்ட ஒரு குழு — கழகம் அமைத்தது அல்ல — தெரிவிக்கிறது, நூற்றுக்கு ஐம்பது பேர்களுக்கு மேல், திட்டம் பற்றி எதுவுமே தெரியாது என்பதாக. அதுவும் நகர்ப்புறத்திலே இந்த நிலைமை!! திட்டத்தின் விவரமே, நகரப் பகுதியிலேயே சரியான முறையில் தெரியவில்லை என்றால் ஆர்வம் எங்கிருந்து எழும்! மன மகிழ் மன்றத் திறப்பு விழாவன்று, ஆர்வம் எழுகிறது, மந்திரிக்குப் பக்கத்தில் நிற்கிறோம் என்ற மகிழ்ச்சியால், மிட்டா மிராசுக்கு! மிட்டா மிராசு தம்மைப் புடைசூழ நிற்பதால் தேர்தலின்போது செலவுத் தொகை குறித்துக் காங்கிரஸ் கவலைப்படத் தேவையில்லை என்ற எண்ணம் அமைச்சருக்கு ஆர்வம் தருகிறது. மக்கள் ஆர்வம் காட்டவில்லை! அவர்கள் இந்த நிகழ்ச்சிகளை, காங்கிரஸ் மேற்கொள்ளும் பிரசாரம் என்று மட்டுமே கருதுகின்றனர். இந்த அமைப்புகளை, காங்கிரசின் விளம்பரச் சாவடிகள் என்றுதான் எண்ணுகிறார்கள்.

விளம்பரச்சாவடி!

வீண்செலவு!

தொழில் அமைச்சராக உள்ள சஞ்சீவய்யா, தெளிவாகவே கூறியிருக்கிறார் சென்ற திங்கள் — திட்டக் காரியத்திலே வெற்றி பெற வேண்டுமானால், வயலிலே உழைப்பவனும், தொழிற்சாலையிலே வேலை செய்பவனும் ஆர்வம் காட்டவேண்டும்; அந்த ஆர்வம் எழவேண்டுமானால், திட்டத்தின் பலனாக, தம்முடைய வாழ்க்கை செம்மைப்படும் என்ற உணர்வும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டும் என்ற கருத்துப்பட.

புதியதோர் தொழிற்கூடம், மூன்று நான்கு மாடிகள் கொண்டதாக, மேனாட்டுக் கட்டடக் கலைஞர்களும் கண்டு வியந்து பாராட்டத் தக்கதாக அமைந்து, வசதியாக முப்பது மோட்டார்கள் நிறுத்திவைப்பதற்கான இடமும் கொண்டதாக, அந்தக் கட்டடம் காட்சி அளித்து, அதைச் சுற்றிலும், சற்றுத் தொலைவிலும், இடிந்துபோன மண்சுவர்களும் பிய்ந்துபோன கூரைகளும் கொண்ட கொட்டில்களையே தமக்கு எனப் பெற்ற தொழிலாளர்கள், கூடிநின்று, குமுறிக் கிடப்பது என்றால், அமைச்சர் சஞ்சீவய்யா சொன்ன ஆர்வம் தொழிலாளர் மனதிலே எங்ஙனம் எழமுடியும்! எழவில்லை என்று நாம் கூறிய போது, கொதித்தெழுந்தனர் கொடி தாங்கிகள்; இப்போது அந்த ஆர்வம் எழாததாலேதான் திட்டத்திற்குமுழு வெற்றி கிட்டவில்லை என்று கூறுகிறார்கள்; சற்று தயக்கத்துடன், பெரும் அளவு கூச்சத்துடன்.

இவ்விதம், திட்டங்கள் குறித்து, கழகமும் மற்ற முற்போக்காளர்களும், தமது கண்டனத்தைத் தெரிவித்துவந்தபோது, மறுத்துப் பேசி, மார் தட்டிப் பெருமிதம் காட்டிப் பேசி வந்தவர்கள், இன்று தலையைச் சொறிந்து கொள்கிறார்கள். முக வாய்க்கட்டையைத் தடவிக்கொள்கிறார்கள். திட்டம் போட்டுச் செயல்பட்டு வருகிறோம் என்று சொல்லி விட்டாலே போதும், மக்கள் மண்டியிட்டுக் கிடப்பார்கள், எத்தனை குறைபாடுகள் ஏற்படினும் எவரும் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த மத மதப்பு மடிந்து வருகிறது. இப்போது திட்டங்களிலே காணப்படும் குறைபாடுகளைப்பற்றி அவர்களே பேசித் தீரவேண்டிய நிலைமை, சமாதானம் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல அமைச்சர் சுப்பிரமணியம் சென்ற கிழமை, ஐந்து ஆண்டுகள் என்று ஒரு காலவரையறை வைத்துக்கொள்வதுகூட சில அமைப்புகளுக்குப் பொருந்தவில்லை; பெயர் ஐந்தாண்டுத் திட்டம் என்று இருப்பதனாலேயே, எந்த ஒரு அமைப்பும், ஏற்பாடும் ஐந்தே ஆண்டுகளில் உருவெடுத்தாக வேண்டும் என்பதில்லை என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது ஆளவந்தார்களின் அலட்சியப் போக்கு, அவர்களுக்குக் கிடைத்துள்ள ஆலவட்டங்களின்

க்கும் ஆணவம் ஆகியவைபற்றி பொருட்படுத்தாமல், தவறு தெரியும்போது கண்டிப்பது, ஜனநாயக வாதியின் கடமை என்ற உறுதிப்பாடுடன் நாம் இதுவரை நடந்து கொண்டு வந்தது பலனைத் தந்திருக்கிறது என்பது தெளிவாகிறது.

இனியும் இதே நோக்குடன் ஆள வந்தார்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும், திட்டங்களையும் கண்காணித்து வருகிற கடமையைச் செம்மையாகச் செய்துவர வேண்டும் என்பதும் உறுதிப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரை உச்சரித்த மாத்திரத்தில், எதிர்ப்புகள் முறிந்து போகும், மக்கள் சொக்கிவிடுவர் என்று எண்ணிய காலம் மடிந்துவிட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து கண்டித்திட, தேபர் போன்றவர்கள் முன்வந்துவிட்டனர். இந்தக் கண்டனத்தை மறைத்திடவோ ஒழித்திடவோ, காங்கிரஸ் கட்சி தன்னிடம் புகலிடம் தேடி வந்தவர்களை ஏவிப் பயன் கண்டிட முடியாது! அவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள், முன்பு இந்தத் திட்டங்களைப் பலமாகக் கண்டித்துப் பேசியவர்கள்; அவர்களே இப்போது, பக்திப் பரவசத்துடன் திட்டங்களை ஆதரித்து, அவை அப்பழுக்கற்றவை என்று பேசிடும்போது, கேட்போர் கண் சிமிட்டியபடி இருக்கிறார்கள்; காலத்துக்கேற்ற கோலம்! கோலத்திற்கேற்ற வார்த்தை ஜாலம்! என்று கூறிக்கொள்கிறார்கள்.

எவர் எந்நிலையை மேற்கொண்ட போதிலும்; ஜனநாயகக் கடமை உணர்ச்சியுள்ளவர்கள், திட்டங்களிலே காணப்படும் குறைகளை எடுத்துக்கூறத் தயங்கப்போவதில்லை.

திட்டங்கள் தீட்டப்பட்டதிலே தவறு ஏதும் இல்லை; ஆனால் அவைகளை நிறைவேற்றிய முறையிலே தான் தவறுகள் ஏற்பட்டுவிட்டன என்று ஒப்புக்கொண்டு, கூறிடப் பத்து ஆண்டுகளுக்கு மேலாயின.

இப்போது திட்டக் கமிஷன் துணைத்தலைவர் அசோக் மேதா, இதைவிட ஒரு படி முன்னாலே சென்று, திட்டங்களை நிறைவேற்றிய முறையிலே தவறுகள் ஏற்பட்டுவிட்டன என்று மட்டும் கூறினால் போதாது, திட்டங்கள் தீட்டப்பட்டபோதே கூடத் தவறுகள் ஏற்பட்டுவிட்டன; திட்டத்திலேயே தவறுகள்உள்ளன என்று துணிந்து கூறிவிட்டிருக்கிறார்.

இப்போது ஐந்தாண்டுத் திட்டம் அப்பழுக்கற்றது என்பதும் பொய்த்துப் போயிற்று, அது சகலரோக நிவாரணி அல்ல என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது. அந்த திட்டங்களைப் பற்றிப் பேசுவதனால் மட்டுமே மக்களின் ஆதரவைப் பெற்றுவிட முடியுமா என்பதிலே ஐயப்பாடு ஏற்பட்டுவிட்டது.

ஒருவிதமான அடக்க உணர்ச்சி கூட, பொறுப்பில் உள்ளவர்களுக்குப் பிறந்திருக்கிறது என்று கூறலாம்; போய்ச் சேர்ந்தவர்கள் சில காலம் புதுக் கடைச் சரக்கினைக் கூவிக் கூவி விற்றிட முனைவது இயற்கை.

இனி மூடி மறைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிடவே, இப்

முகப்பு விளக்கம்

திருமணம் நடந்து இருபது ஆண்டுகள் கழித்துப் பிறந்த தம் மகனுக்கு—"புஷியா"—என்று பெயரிட்டனர் பெற்றோர். ஜாம்பியாவின் மொழியில் புஷியா என்றால் "எதிர்பாராதது" என்று பொருளாம். இருபது ஆண்டுகளுக்குப் பின் எதிர்பாராது பிறந்த பிள்ளை 40 ஆண்டுகளுக்குப்பின் நாட்டுக்கே தலைவனாகி, உரிமையைப் பெற்று ஆட்சிப் பொறுப்பு ஏற்பான் என்பதையும் அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

துணிவும் ஆற்றலும் மிக்க டாக்டர் கென்னத்கௌண்டா அவர்கள் மிக்க துன்பமான சூழ்நிலைகளிலும் மனம் துவளாமல் இருந்து போராடித் தன் நாட்டுக்கு-ஜாம்பியா நாட்டுக்கு-அக்டோபர் 24-ஆம்நாள் ஐக்கிய நாடுகள் தோன்றிய நாளில் உரிமைபெற்றார்.

இயற்கை வளமும்; கனிவளமும் மிக்குள்ள நாடுதான் எனினும் படித்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள் மிகுதியாக இல்லையே என்ற குறை இருக்கிறது. ஆனால் அந்தக் குறையை நிறைசெய்து நாட்டை நன்னிலைக்குக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை நல்லவர்கள் உள்ளங்களில் தோன்றுகின்றது.

டாக்டர் கென்னத் கௌண்டா அவர்களையே ஜாம்பியா நாட்டுச் சூழலில் அட்டையில் காண்கிறீர்கள்.

போது அதிகார பூர்வமாகவே, 'திட்டத்தில் தோல்விகள்' ஏற்பட்டுவிட்டன என்று, திட்ட கமிஷனே, தேசீய அபிவிருத்திக் கவுன்சிலுக்குத் தெரிவித்துவிட்டது. புதுடில்லியிலிருந்து அக்டோபர் 28-ம் நாள் வெளியிடப்பட்டுள்ள செய்தி இதை அறிவிக்கிறது.

கடந்த 13 ஆண்டுகளாக, திட்டத்தில் ஏற்பட்ட தோல்விகளுக்கான காரணம் ஆராய்ந்தறியப் பட்டிருக்கிறது.

திட்டமிடுவதின் தன்மையைச் செம்மைப்படுத்தினுலொழிய எதிர்பார்க்கப்படும் பலன்களைப் பெற முடியாது என்பது உணரப் படுகிறது.

திட்டக் குழுவிலே பணியாற்றுபவர்களின் திறமையும், தொழில் நுட்ப அறிவும் வளர்ந்ததாக வேண்டும் — தரமானதாக்கப்பட வேண்டும்.

பல அமைச்சர்களின் அலுவலகங்களில் திட்ட வேலைகளுக்காகப் போதுமான ஆள் அமைப்பு இல்லை.

திட்டத்திடம் அவர்களின் பிடி, வலுவற்றதாக இருக்கிறது.

ராஜ்யங்களிலே உள்ள, திட்ட வேலைக்கான அமைப்புகள் நல்ல படி செயல்படவில்லை.

இக்கருத்துகளை திட்டக் குழுவே தெரிவித்திருக்கிறது — இப்போது!!

ஆயிரக்கணக்கான கோடிகளைக் கொட்டியான பிறகு, இந்த நிலை!

திட்டங்கள் தரமாக அமையவில்லை, சரியாகச் செயல்படுத்தப் படவில்லை, அக்கறை குறைவாக இருக்கிறது என்றெல்லாம் எதிர்க் கட்சிகள் சொன்னபோது, 'சுடு மூஞ்சி' காட்டினவர்கள், இப்போது என்ன சொல்லப் போகிருர்கள்.

'காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா ரூ. 10—00
ஆறுமாத சந்தா ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

இத்தனை பெரிய விரயம், திறமைக் குறைவு, நடந்துவிட்டிருக்கிறது, இந்த நாடு தவிர வேருேர் நாடாக இருப்பின், இந்த மோசமான நிலைமைக்குக் காரணமாக இருந்தவர்கள், முக்காடிட்டுக் கொண்டு மூலையில் அமர்ந்துவிடுவார்கள்; ஆனுல் இங்கோ, அவர்கள் இன்னமும் தமது முடுக்கைக் கூடக் குறைத்துக்கொள்ள மறுக்கிருர்கள். ஏன்? மக்களிடம் அவர்களுக்குத் துளியும் அச்சம் இல்லை!

ஐந்தாண்டுத் திட்டங்கள் குறித்த பல்வேறு விவரங்களைப் பொது மக்கள் முன் எடுத்து வைத்திடும் கடமையை மேலும் செம்மையாகச் செய்திட வேண்டும்; ஏனெனில் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான செலவு, கேட்கும்போதே பிரமிக்க வைக்கத்தக்கதாக இருக்கிறது—22 ஆயிரம் கோடி ரூபாய் என்கிருர்கள்.

இத்தனைப் பெரும் பொருளைச் செலவிட்டு திட்டம் தீட்டி நிறைவேற்ற முனையும் அரசு, ஏற்கனவே கொண்டிருந்த அலட்சியப் போக்கினை விட்டொழித்து, மக்களிடமும் மக்களிடம் தொடர்பு கொண்டுள்ள கட்சிகளிடமும், கலந்து பேசி, திட்டத்தை உருவாக்கிட வேண்டும்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின்போதும் காட்டிவந்த 'முடுக்கு' இனியும் ஆகாது; நாடு தாங்காது.

என்னென்ன தேவை? எவ்விதம் அவை இருத்தல் வேண்டும்? எங்கனம் அவைகளைச் செயல்படுத்த வேண்டும்? என்பவை குறித்து அத்தாணி மண்டபத்திலோ, நிலா முற்றத்திலோ, மகுடதாரிகள் கூடிப் பேசி முடிவெடுத்திடும் முறையிலேயே திட்டம் வகுத்திடக்கூடாது; கழனியில் உழைக்கும் காத்தானும் தொழிற்கூடத்தில் உழைத்திடும் முத்தனும், தமது வாழ்வு சீர்பெற என்ன வேண்டுமென்று விரும்புகிருர்கள் என்பதனைக் கேட்டறிந்து, திட்டம் அவர்களின் நல்வாழ்வுக்கு உருப்படியான பலனைத் தரத்தக்க விதமாகத் தீட்டப்பட வேண்டும்' செய்வார்களா?

❀

கைதி எண். 6342

தம்பி!

சிறைக்குள்ளே நுழைந்ததும், நான் வெளியே போய்வந்ததால், ஏதேனும் 'சேதி' கொண்டு வந்திருப்பேன் என்று எண்ணிக்கொண்ட நண்பர்கள் மெத்த ஆவலாக என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்.

நான் பார்த்துவிட்டு வந்ததோ, போலீசார், நோயாளிகள், டாக்டர்கள் ஆகியோரைத்தான், எனவே நான் நண்பர்களுடன் சேர்ந்து, மேயர் தேர்தல் பற்றிய விவாதத்தில் ஈடுபட்டிருந்தேன்.

மணி இரண்டு! உள்ளே நுழைவார்கள்–உறுதி மொழி எடுப்பார்கள்–மூன்று மணி, உறுதி மொழி எடுப்பது பகுதிக்கு மேல் முடிந்திருக்கும்–நாலு மணி! முன்மொழிந்திருப்பார்கள், கிருஷ்ணமூர்த்தியின் பெயரை! மணி ஐந்து! இன்னேரம் 'ஓட்டு' பதிவாகிக் கொண்டிருக்கும் என்று சிறைக்குள்ளே நாங்கள் துடித்த நிலையில் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் நிலையை யூகித்தறிந்து கொண்ட சிறைக் காவலாளிகள்கூட புன்னகை செய்தபடி இருந்தனர்.

ஐந்து மணிக்குமேல், என்னைக் காண ராணி, பரிமளம், நடராசன் மூவரும் வந்திருந்தனர்.

ராஜகோபால், உண்ணுவிரதம் இருக்கப்போவதாகச் சொன்னது விளையாட்டுக்கு என்றுதான் எண்ணிக்கொண்டதாகப் பரிமளமும், இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒருநாள் முழுவதும் 'நம்நாடு' அலுவலகத்திலேயே ராஜகோபால் தங்கி இருந்ததாக நடராசனும் கூறினுர்கள். சிறை மேலதிகாரிகள் உடன் இருந்ததாலும், அரசியல் பேச்சு அறவே கூடாது என்று தடை இருந்ததாலும், மேற்கொண்டு எந்த விளக்கமும் பெற வழி இல்லாமற் போயிற்று. எம். ஜி. ஆர். கழகப் பணியாற்றுவதிலிருந்து விலகமாட்டார், தம்மீது வேண்டுமென்றே சிலர் வீண்பழிசுமத்துவதைக் கண்டிக்கவே மேலவை உறுப்பினர் பதவியை விட்டு விலகினுர் என்று கூறி நடராசன் என் மனதுக்கு நிம்மதி ஏற்படுத்தினுர். மேயர் தேர்தலில், வெற்றி நிச்சயம் என்றும், சிக்கல் ஏதும் இல்லை என்றும் கூறி எனக்கிருந்த குழப்பத்தைப் பெருமளவு போக்கினுர். என் பெரிய மருமகப்பெண் சரோஜாவை அழைத்துக் கொண்டு ராணி மாயவரம் செல்லப் போவதாகக் கூறினுர்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு சரோஜாவுக்கு 'ஜுரம்' என்றும், இப்போது நலமாகவே இருப்பதாகவும் தெரிவித்தார்கள். உயர்நீதி மன்றத்தில்; கருணுநிதி, நடராசன் ஆகியோருடைய வழக்கு மறுநாள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது என்று நடராசன் கூறினுர்.

அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு, உள்ளே வந்ததும், நண்பர்கள் சூழ்ந்துகொண்டார்கள், என்ன சேதி? நடராசனு வந்திருந்தது? மேயர் தேர்தல் எப்படி? என்றெல்லாம் கேட்டபடி.

நடராசன் தைரியமாகவே இருக்கிருர்; கழகம் வெற்றிபெறும் என்கிருர் என்று கூறினேன் என்ருலும் இரவு நெடுநேரம் வரையில் மேயர் தேர்தல் சம்பந்தமான கவலையுடனேயே இருக்க நேரிட்டது—இத்தனைக்கும் ஒரு சிறைக்காவலாளி, கிருஷ்ணமூர்த்தி மேயாகவும், கபாலமூர்த்தி துணைமேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள் — 55 வாக்குகள் என்று கூறியிருந்தார் — என்ருலும், பத்திரிகையில் செய்தி பார்க்கிற வரையில், நிம்மதி எப்படி ஏற்படும். இது குறித்தே கவலை மிகுந்திருந்ததால், இன்று இரவு குறிப்பு எழுதுவதுடன் நிறுத்திக்கொண்டேன் — அதிகமாகப் படிக்க விருப்பம் எழவில்லை.

17—3—64

இன்று காலையில், சிறை மேலதிகாரிகள் கைதிகளைப் பார்வையிடும் நிகழ்ச்சி, வழக்கப்படி நடந்தேறியது.

காலையில், வெளியே இருந்து உள்ளே வந்திருந்த சிறைக்காவலாளிகள் மேயர் தேர்தலில் கழகம் வெற்றி பெற்றது என்று தெரிவித்தார்கள்; மகிழ்ச்சி பொங்கிடும் நிலையில் இருந்தோம், வழக்கத்தைவிட சற்று அதிகமாகவே, நூற்புவேலை செய்தேன். பனிரெண்டுமணிக்கு மேல் பத்திரிகைகள் தரப்பட்டன — வெற்றிச் செய்தியைப் படித்துப் படித்துச் சுவைத்தோம். பொள்ளாச்சி நகராட்சித் தலைவராக கழகத்தோழர் வெற்றிபெற்ருர் என்ற விருந்தும் கிடைத்தது. பொள்ளாச்சி மோடார்

மன்னர் மகாலிங்கம் அரசோச்சும் ஊர்! டில்லி இரும்பு மந்திரி சுப்ரமணியம் அவர்களின் தொகுதி. காங்கிரஸ் ஆதரவு ஏடுகளே எழுதியுள்ளபடி இதுவரையில் காங்கிரஸ் கோட்டையாக இருந்து வந்த இடம். அங்கு நமது கழகத்தோழர் நகராட்சிமன்றத் தலைவர் ஆகியிருக்கிறார் என்பது கேட்டு அகமிக மகிழ்ந்தோம்.

நாம் விரும்பியபடியே நண்பர் கிருஷ்ணமூர்த்தி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார் என்ற செய்தி எங்களுக்கு இந்த சிறைச்சாலையையே சிங்காரச் சோலையாக மாற்றிவிட்டது.

துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கபாலமூர்த்தி, என் நீண்டகாலத்து நண்பர். இருபது வருடங்களாக எனக்குத் தோழர். சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தில், நான் ஈடுபட்டுப் பணியாற்றிய நாள்தொட்டு எனக்கு உற்ற நண்பராக இருந்து வருபவர், ஏழை, அடக்கமானவர், கொள்கைப் பிடிப்பு உள்ளவர் அவர் துணைமேயராக வந்திருப்பது எனக்கு அளவிலாத மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும்.

இன்று மாலை, அடைக்கப்படுமுன்பு, மற்றோர் மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது. வழக்கறிஞரும் என் நண்பருமான கழகத் தோழர் சாமிநாதன், சிதம்பரம் நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் — அவருடைய தந்தி கிடைத்தது; மிக்க மகிழ்ச்சி பெற்றேன்.

ஒரே நாளில் இத்தனை மகிழ்ச்சியா என்று கேட்டுத் தாக்குவதுபோல, நீண்ட பல ஆண்டுகளாக எனக்கு மிகவும் வேண்டியவராக, குடும்ப நண்பராக விளங்கிக் கொண்டுவந்த, கழக அன்பர், திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்கள், காலமானார் என்ற திடுக்கிடத்தக்க செய்தியை தந்தி மூலம் நண்பர் நடராசன் தெரிவித்திருந்தார்.

தொத்தாவின் மறைவினால் நான் வேதனைப் பட்டிருந்தபோது, காஞ்சிபுரம் வந்திருந்து எனக்கு ஆறுதல் மொழி கூறிய அந்த அன்பரை இழந்துவிட நேரிட்டுவிட்டதை எண்ணி மெத்த வருத்தப்பட்டேன். என்னிடத்திலும் கழக வளர்ச்சியிலும் அக்கறை மிகக் கொண்டிருந்த அன்பர் அவர். அஞ்சா நெஞ்சு கொண்டவர். அவருக்குச் சுயமரியாதைக் கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை உண்டு; பலரைச் சுயமரியாதைக் காரார் ஆக்கிய பெருமையும் உண்டு. நல்ல நிர்வாகத் திறமை உள்ளவர்; செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தில் நற்பணி புரிந்தவர். எங்கு நமது கழகக் கூட்டமென்றாலும், மாநாடு என்றாலும், அவரை அங்கே காணலாம் கழகத் தோழர்களுடன் அளவளாவி மகிழ்வார். அவருடைய மறைவு கழகத்துக்குப் பொதுவாகவும், குறிப்பாக எனக்கும் ஈடுசெய்ய முடியாத நட்டமாகும்.

இன்றிரவு, அன்பருடைய மறைவு பற்றிய துக்கம் தாக்கிடும் நிலையிலேயே; உறங்கச் செல்கிறேன்.

18—3—64

இன்று காலை நம் இதழ்களில், எம். ஜி ராமச்சந்திரன் விடுத்திருந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுகண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். ஏற்கனவே நான் அவருடைய உள்ளப்பாங்கை நன்கு அறிந்திருந்த போதிலும், அவருடைய விளக்க அறிக்கை வெளிவருகிறவரையில், மனது குழம்பியபடித்தான் இருந்து வந்தது. என்னைப் போலவே எண்ணற்ற தோழர்கள் இது குறித்துக் குழம்பிக் கிடப்பார்கள் என்பதை அறிந்து, தக்க சமயத்திலே அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இதற்கு இடையில், கிடைத்த சமயத்தை வைத்துக்கொண்டு அரசியல் ஆளுடக்காரர்களும் கரகமாடுவோரும், தமது 'வித்தைகளை'க் காட்டி மாலை நேரத்தை ஓட்டிக்கொண்டிருந்திருக்கிறார்கள் என்ற செய்தியைச் சில இதழ்களின் மூலம் தெரிந்துகொண்டேன்.

எந்தப் பிரச்சினை குறித்தும் அதிகமான அளவு மனக்குழப்பம்கொள்ளாமல், தமக்குத் தோன்றும் விளக்கத்தை. ஒளிவு மறைவு இல்லாமலும், கூச்சம் அச்சம் கொள்ளாமலும் எடுத்துக் கூறுபவர் அன்பழகன். அவருங்கூட எம். ஜி. ஆர். விலகல்பற்றி மனச்சங்கடம் கொண்டிருந்தார். இன்று வந்த அறிக்கையைப் பார்த்த பிறகு மகிழ்ச்சி அடைந்தார். வேடிக்கையாக ஒன்று சொன்னார்—அந்த வேடிக்கையிலும் ஒரு நேர்த்தியான உண்மையும்; சுவையான கருத்தும் இணைந்திருந்ததை உணர்ந்தேன்.

எம். ஜி. ஆர், மேலவை உறுப்பினர் பதவியை விட்டுவிட்டார்—அது இனிக் காங்கிரசு கட்சிக்குத்தான் கிடைத்துவிடும்—என்று துவக்கினார்.

ஆமாம்—சிலநாள் கழித்து, தேர்தல் வைத்துக் கொள்வார்கள் — ஒரே இடம் என்பதால் அது எண்ணிக்கை வலிவுள்ள காங்கிரஸ் கட்சிகுத்தான் கிடைக்கும் என்று கூறினேன் — வருத்தத்துடன். சிரித்துக்கொண்டே அன்பழகன் சொன்னார், இதுவரையில் நாம் நமது வாக்குகளைப் பல கட்சியினருக்கும் கொடுத்து, அவர்களுக்கு இங்கும் டில்லியிலும் மேலவையில் இடம் கிடைக்கச்செய்தோம்—காங்கிரசுக்கு மட்டுந்தான் இடம் கொடுக்காமலிருந்தோம், இப்போது அந்தக் குறையும் நீங்கிவிட்டது; புரட்சிநடிகர் விட்ட இடத்திலே ஒரு காங்கிரஸ்காரர் புகுந்துகொள்வார்—என்றார். எல்லோரும் சிரித்தோம்-எவரெவருக்கு நாம் இத்தகைய வாய்ப்பு அளித்திருக்கிறோம் என்று கணக்கெடுத்தோம்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைவரான பி. டி. இராஜனுக்கு ஒருமுறை வாக்களித்து மேலவையில் அமரச் செய்திருக்கிறோம்.

கம்யூனிஸ்டு கட்சியினரான இராமமூர்த்திக்கு வாக்களித்து, டில்லி மேலவையில் சென்று அமர வாய்ப்பளித்தோம்.

முஸ்லீம் லீகினர் ஜானிபாயை ஆதரித்து சென்னை மேலவையில் உறுப்பினராக இருக்கவைத்தோம்.

சுதந்திரக் கட்சியினரான பேராசிரியர் இரத்தின சாமியை ஆதரித்து டில்லி மேலவையில் அமர ஏற்பாடு செய்தோம்.

முஸ்லீம்லீகின் தோழர் சமதும், சுதந்திரக்கட்சி மாரிசாமியும் இம்முறை நமது ஆதரவுபெற்று டில்லி மேலவை செல்ல இருக்கிறார்கள்.

இப்படி இத்தனை கட்சிகளுக்குத் துணை செய்துவிட்டு, காங்கிரசுக்கு மட்டும் ஒருமுறைகூட ஆதரவு தராமலிருக்கலாமா! அந்தக் குறையும தீர்ந்துபோகத்தானே என்னவோ, மேலவை உறுப்பினர் பதவியை எம். ஜி. ராமச்சந்திரன் உதறிவிட்டது!—என்று பேசிக்கொண்டிருந்தோம்.

மறைந்த பெரும் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, இன்று மணிகளெனச் சுடர்விட்டு விளங்கும் டாக்டர் மு. வ., ஔவை துரைசாமி, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற தமிழ்ப் புலவர்களின் அறிவாற்றல் குறித்து அன்பழகன் கனிவாகப் பல கூறினார். பொதுவாக இன்று தமிழ்மொழி பெற்றுவரும் ஏற்றம் குறித்துப் பேசி மகிழ்ந்தோம். குறளாராய்ச்சியில் அன்பழகன் ஈடுபட்டிருக்கிறார் ஆகையால், அவரிடம் அதுகுறித்துப் பேசி மகிழ்வதிலே எனக்கோர் தனி இன்பம் கிடைக்கிறது.

நமது கழகத்தோழர்கள், சட்டமன்றத்தில் மிகச் சுறுசுறுப்புடன் பணியாற்றி வருவது, இதழ்கள் மூலம் தெரிகிறது. மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது வழக்கம் போல இதழ்கள் இது குறித்து இருட்டடிப்புச் செய்து வருகிறது என்றாலும், ஓரளவுக்கு 'நம்நாடும்' — 'முரசொலியும்' மக்களுக்கு விளக்கமளிக்க முனைந்திருக்கின்றன என்பது உற்சாகமூட்டுவதாக இருக்கிறது.

தமிழ்மொழி ஏற்றத்துக்காகவும் பிறமொழி ஆதிக்கத் தடுப்புக்காகவும், பணியாற்றி வரும் நமது கழகத்திடம், தமிழறிஞர்கள் பற்று காட்டவேண்டியது முறையாயிருக்க, சிலர் வெறுத்து ஒதுக்குவதும், சிலர் அஞ்சி ஒதுங்கிக்கொள்வதும், சிலர் எதிர்த்து நிற்பதுமாக இருப்பது வேதனை தரக்கூடிய விந்தையாக இருக்கிறது என்பது குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம். ஆட்சியில் உள்ளவர்கள் எந்தவிதத்திலும் மனக்கசப்பு கொள்ளக்கூடாது. அதுவோ நமக்கு வாழ்க்கையில் வெற்றி தேடிக்கொடுக்கும் என்ற பாதுகாப்பு உணர்ச்சியே, தமிழ்கற்ற அறிஞர்களை மட்டுமல்ல, வேறு பலரையும் ஆட்டிப்படைக்கின்றது என்பதனை நான் கூறினேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

எங்ஙனம் தோட்டத்தில் மலர்காணும்போது, அது சூறைக்காற்றாலோ, கெடுமதிகொண்டோராலோ, அழிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறதோ, அதுபோல, நவம்பர் 14-ம் நாள் குழந்தைகள் தினத்தன்று, குழந்தைகளை, வறுமை கொட்டிவிடாமல் பாதுகாத்தால்தான், எதிர்காலம் எழிலோவியமாகும், புன்னகைப் பூங்காவாகும், அதற்கேற்ற படி முறைகளைச் செயல்படுத்தியாகவேண்டும் என்ற உறுதி பிறந்திடவேண்டும்.

இந்த எண்ணம், தனித்தனி ஆட்களுக்குத் தோன்றிமட்டும் பயனில்லை, சமூகத்தின வடிவத்தை ஆக்கவும் அழிக்கவும், ஏற்றம்பெறச் செய்யவும், குலைத்திடவும் ஆற்றலைப் பெற்றுக்கொண்டுள்ள அரசுக்குத் தோன்றவேண்டும்; அதற்கு ஏற்ப திட்டமிட்டு செயல்படவேண்டும்.

இதற்கு, செல்வம் பெருகிடவும், எல்லோரும் செய் தொழில் பெற்று நல்வாழ்வு பெற்றிடவும், பெருகிடும் செல்வம் புற்றுப் பாம்பாகிடாமல் கானம்பாடும் வானம்பாடியாகி அனைவர்க்கும் பலன் அளித்திடவுமான முறை வகுத்துக்கொண்டு செயலாற்றவேண்டும்.

வறுமையின் பிடியில் மிகப் பலரை விட்டுவைத்துக்கொண்டே, குழந்தைகள் தினம் கொண்டாடிவிட்டால் போதும் என்று இருப்பது, விதை தூவிவிட்டு கொதி நீரைப் பெய்வதாகிவிடும்.

'குழந்தைகள் தினம்' பச்சைப்பயிர் கருகிடாதபடி பார்த்துக்கொண்டாகவேண்டும் என்ற உறுதியை; ஆளவந்தார்கள் பெறுவதற்கான நாள்.

அந்நாளை, இச்சீரிய நோக்கத்துக்கு ஏற்றதாக்கி இனிவரும் ஆண்டுகளில் கொண்டாடவேண்டும் என்பதற்கே இதனை எழுதினேன். குழந்தைகள்—குலக் கொழுந்துகள் — வாழ்க! வளர்க! என்று வாழ்த்துகிறேன்.

விலை 20 காசு **காஞ்சி** Regd. No. M. 7894

2-ம் பக்கத் தொடர்ச்சி

வரின் திருக்குறள் குறித்து. யார் மதித்தால் எமக்கென்ன, எங்கள் மன்றத்தில் இடம் தரமாட்டோம் வள்ளுவருக்கு என்றுகூறிவிட்டனர் பெரியகுளம் நகரமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்கள்.

O

இதுபோன்றதோர் நூல் வேறு எம்மொழியிலும் இல்லை என்ற பெருமையைத் தேடிக்கொண்டிருக்கிறது வள்ளுவரின் திருக்குறள். வள்ளுவருக்கு இடம் இல்லை என்று கூறிய வேறு நகரமே இல்லை என்ற பெருமையைத் தேடிக்கொண்டது பெரியகுளம்; நகரமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களின் செயலால்.

O

வள்ளுவர், பெரியகுளம் நகர மன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு என்ன கேடுசெய்தார்? ஏதுமில்லை! ஏன் இடம்தர மறுத்தனர்? வள்ளுவர் படத்தை நகர மன்றத்தில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்கள் தி. மு. கழகத்தினர் என்பதால்! ஆட்சியில் இருப்பது நாங்கள்! இன்னது செய்ய வேண்டும் என்று கூறுவது கழகமா? சேச்சே! முடியாது! முடியவே முடியாது! என்று கூறிவிட்டனர்.

O

வாயிலே 'கைகொடுத்து' வாந்தி எடுக்கலானான் வரதப்பன்! ஏன்? என்று கேட்டனர், "பால் சாப்பிட்டு விட்டேன்! அந்தப் பால், எனக்கு 'ஆகாதவன்' தோட்டத்திலே புல் மேய்ந்துவிட்டு வந்த பசுவினுடையது" என்றானாம்.

ரோஷக்காரர் என்றால் இவரல்லவா ரோஷக்காரர் என்று பலரும் பாராட்டுவார்கள் என்று வரதப்பன் எண்ணிக்கொண்டார்; ஆனால் அவர் நடத்தையையும், அதற்காக அவர் கூறிய காரணத்தையும் கண்டவர்கள், பாராட்டிடவா செய்வார்கள்.

O

கட்சிக்காக என்று சில முறைகள், சில செயல்கள் இருக்கவேண்டியதுதான்! ஆனால் இப்படியா? வள்ளுவருக்கு 'அவமதிப்பு' செய்கிற முறையிலா!!

O

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகத்தில்தான் சென்னை மாநகராட்சி மன்றம் இருந்து வருகிறது. காமராஜரின் சிலையும், சத்தியமூர்த்தியின் சிலையும் திறந்து வைக்கப்பட்டன, அவர்கள் மதிக்கத்தக்கவர்கள் என்பதால். அதனால் கழகத்தின் மதிப்பு கெட்டுவிடவில்லை; பண்பாளர்கள் கழகத்தைப் பாராட்டுகிறார்கள்.

தம்பி கருணாநிதி அமைத்த ஒரு மருத்துவமனையை, அவருடைய எதிர்ப்பைப் பெற்றபடி இருக்கும் முதலமைச்சர் பக்தவத்சலம் திறந்து வைத்தார்; அதனால் அவருடைய பெருமை குன்றிவிடவில்லை; மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஏன் இந்த அனியாயம்?

விஜயவாடாவில், ஆந்திரமாநில முன்னாள் அமைச்சரும் இன்று டில்லியில் இரும்பு அமைச்சராகவும் உள்ள சஞ்சீவியாரின் உருவச் சிலையைத் திறந்து வைத்திருக்கிறார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர், சிலையைத் திறந்து வைத்தாராம்.

முதலில் இருந்துவந்த ஏற்பாடு, இந்தச் சிலையை லால்பகதூர் திறப்பது என்று இருந்ததாம்; ஆனால் காங்கிரஸ் மேலிடத்தவர்கள் சிலர்! இது முறையல்ல என்று தெரிவித்துவிடவே, லால்பகதூர் சிலையைத் திறந்துவைக்கச் செல்லாமல், காமராஜரை அனுப்பி வைத்தாராம்.

காமராஜர் திறந்துவைத்ததால், சஞ்சீவியாருக்கு எந்த வித்தத்திலும் மதிப்புக் குறைந்துவிடவில்லை; அதற்காக அல்ல இதுபற்றிக் குறிப்பிட்டிருப்பது. வேறோர் அனியாயம் நடைபெற்றிருக்கிறது, அதனைக் கூறவே இதுபற்றிக் குறிப்பிடுகிறோம்.

விஜயவாடாவில், எந்த இடத்திலே இப்போது சஞ்சீவியாரின் சிலை அமைக்கப்பட்டிருக்கிறதோ, அங்கு பழங்குடி மக்களின் ஒப்பற்ற தலைவரும், உலக அறிவாளர்களில் ஒருவர் என்று எல்லாக் கட்சியினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவருமான, மதிப்புமிகு டாக்டர் அம்பேத்காரின் சிலையை அமைப்பது என்று ஏற்கனவே விஜயவாடா நகராட்சி மன்றம் தீர்மானித்திருக்கிறது.

அதே இடத்தில், இப்போது சஞ்சீவியாரின் சிலையை அமைத்துவிட்டார்கள்.

டாக்டர் அம்பேத்காரின் சிலை அமைக்கப்படுவதற்காகவென்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த 'மைய்ய'மான இடத்தை சஞ்சீவியாரின் சிலை பிடித்துக்கொண்டுவிட்டிருக்கிறது.

இனி டாக்டர் அம்பேத்காரின் சிலைக்கு ஏதேனும் ஓர் ஒதுக்குப்புறமான இடம் தருவார்கள்போலிருக்கிறது.

இந்த அனியாயம் வேண்டாம் என்று விஜயவாடா நகராட்சித் தலைவர்கள் கூறிப்பார்த்திருக்கிறார்கள்; சிலைக்குழுவினர் அவர்களின பேச்சைப் பொருட்படுத்த மறுத்துவிட்டனா.

ஆந்திரமாநில குடியரசுக்கட்சி இந்த அனியாயத்தைக் கண்டித்தது; காங்கிரஸ் பெருந்தலைவர்கள், அந்தக் கண்டனத்தையும் மதிக்கவில்லை.

சிலையைத் திறந்திடக் காமராஜரை அழைத்தார்கள்; அவரும் ஏன் இந்த அனியாயம் என்று கேட்கவில்லை; சென்றார்; திறந்தார்; மகிழ்ந்தார்.

ஆனால் நாட்டிலுள்ள நல்லறிவாளர் எவரும், இப்படி ஒரு அனியாயம் நடத்தப்பட்டதைக் கண்டிக்காமலிருக்கமாட்டார்கள்.

ஏன் இந்த அனியாயம்? என்றே எவரும் கேட்பர்.

சின்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.